உ

சிவபெருமான் திருவருள்துணை

தமிழ்வேதத்
தலயாத்திரைப்பட
விளம்பரம்.

அப்படங்களின் ஆசிரியர்
செங்கற்பட்டு ஜில்லா, பாலூர் போஸ்டு,
பாலூர்
ந. மு. சுப்பராய முதலியார்
எழுதியது.

2602

தமிழ்வேதத் தலயாத்திரைப்பட விளம்பரம்

இதனுள்

இப்படங்களின் இயற்கைச் சிறப்புக்களை எடுத்துக் காட்டும் சிபார்ஸுகள் முன் பக்கங்களில் உள்ளன.

பொதுவாக இப்படங்கள் எல்லாத் தமிழன்பர்களுக்கும் நன்மை தருவனவா யமைந்திருக்கின்றன.

சிறப்பாகக் கோயில்களின் பொது வரலாறுகள் 1 முதல் 9 வரையிலும் இவை அக்கோயில்களுக் கெல்லாம் இன்னின்ன வகைகளில் நற்பலன்களைத் தருவனவா யிருக்கின்றன என்ற விவரங்கள். 10-முதல் 21-வரையிலும்,

கல்விச்சாலைகளுக்கெல்லாம் இன்னின்ன வகைகளில் நற்பலன்களைத் தருவனவாயிருக்கின்றன என்ற விவரங்கள் 22-முதல் 29-வரையிலும்,

நான் தலயாத்திரை செய்யத் தலைப்பட்ட 1911 முதல் பலவகையான உதவிகளைச் செய்துவருகிற பரோபகாரிகளின் பெயர்களும் அவர்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக்கொள்ளும் வாழ்த்துரைகளோடமைந்த வணக்கங்களும் 30 ஆவதாகவும்,

இப்படங்களின் விலைகள் 31-ஆவதாகவும்,

ஆக முப்பத்தொரு விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன.

குறிப்பு :

இம் மூன்று படங்களிலும் வரைந்து காட்டப்பட்டுள்ள தலங்கள் முதலானவற்றின் பெயர்கள், அவற்றின் தொகைகள், ஆகியவைகளும் ;

இப் படங்களைப் பதிப்பிப்பதற்கான பொருள்களை இனமாகவும் முன்பணமாகவும் தந்துதவிய பரோபகாரிகளின பெயர்கள், இவர்கள் தந்த பணத்தொகைகள், ஆகியவைகளும் ;

உடனே பதிப்பிப்பதாயிருக்கிற 'தமிழ்வேதத் தலயாத்திரைப் படவிளக்கம்' என்னும் நூலின் முகப்பில் விவ்ரிப்பதற்காக இருக்கின்றன.

சற்குருநாதன் துணை.

அடியேன் இத் திருந்தியதுறையில் முன்னேறிச் செல்வதற்கான சமயக் கல்வியை இராப்பகலின்றி விரும்பும் போதெல்லாம் மகிழ்வுடன் போதித்தருளிய நல்லாசிரியரும், என் அருமைத் தமக்கையாரின் கணவருமான, பாலூர் ஸ்ரீ நாகப்பவேலு முதலியார் அவர்களின் திருவடிகளை என் மனமாரச் சிந்தித்து, வாயார வாழ்த்தித், தலையார வணங்குகின்றேன்.

ந. மு. சுப்பராயன்,
பாலூர்.

Free Printers, 147, Coral Merchant St., Madras.

சென்னை மாகாணத்து அரசாங்க அமைச்சர்

மேன்மை நிரம்பிய கனம்

எம். பக்தவத்சல முதலியார் அவர்கள்,

நம் தமிழ் நாட்டிலும் இதைச் சார்ந்திருக்கிற பிறநாடுகளிலுமுள்ள திருக்கோயில்கள், கல்விச் சாலைகள், பொது நலத்தாபனங்கள், ஆகிய இவற்றின்; நிர்வாகத்தர்கள், உரிமையாளர்கள், ஆகியவர்களுக்கு;

இத் தமிழ் நாட்டின் பழையகால நாட்டுப் பிரிவுகள், திருக்கோயிற்றலங்கள், சரித்திரப்புகழ் பெற்றுள்ள ஊர்கள், இவை முதலானவைகளைத் தெளிவாய்க் காட்டுகிற மூன்று தமிழ்த்தரைப்படங்களைப் பற்றித் தெரிவிப்பதாவது.

"நம் நாட்டுக்கலையும் நாகரீகமும் நம் புராதனக் கோயில்களாலேயே காக்கப்பட்டு வருகின்றன. நாம் காணும் வானளாவிய கோபுரங்களும், மிகநுணுகிய வேலைப்பாடும் அமைந்த சிற்பங்களும், அழகிய சித்திரங்களும், விசாலமான மண்டபங்களும், நம் சிறந்த பொக்கிஷங்கள். இவைகளைக் கண்டு களிக்க வெளியிலுள்ள பலநாடுகளிலிருந்தும் மக்கள் வருகின்றார்கள். ஆஸ்திகர்களாகிய தமிழ் மக்கள் இந்த ஸ்தலங்களைத் தரிசிப்பதால் உயர்ந்த அறிவையும் சிறந்த அனுபவத்தையும் மேலான இன்பத்தையும் பெறுகின்றார்கள். ஆனால், தலயாத்திரீகர்களுக்குப் பயனளிக்கக்கூடிய வழியில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இதே நோக்கத்துடன் பாலூர் ந. மு. சுப்பராய முதலியார், நம் நாட்டின் படங்கள் மூன்றை வரைந்து விளக்கத்துடன் வெளியிட்டிருப்பதை நான் மிகவும் பாராட்டுகிறேன். இப்படங்களில் ஆசிரியரின் சலியா உழைப்பும் உற்சாகமும் காணப்படுகின்றன. இப்படங்களின் மூலம் தமிழ் நாட்டையும் தமிழர்களையும் இந்தியாவையும் நன்கு அறிந்து கொள்ளலாம். நம் நாட்டிலுள்ள பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் மற்ற பொது நலத் தாபனங்களிலும் அவ்வவற்றிற் குரியார்கள் இப்படங்களை வாங்கி எல்லோரும் பார்த்துப் பயனடையும் படியாக வைத்து அறிவு வளர்ச்சிக்கும் யாத்திரீகர்களின் உதவிக்கும் தக்க ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அடையாறு
10-4-48

எம். பக்தவத்சலம்"

PRINTED AT THE FREE PRINTERS, MADRAS 1

OFFICE OF THE HINDU RELIGIOUS ENDOWMENTS BOARD,

CATHEDRAL POST, MADRAS.

Circular No. *Dated*

Sub:

Maps of ancient Tamil land—Brought to the notice of the Trustees of Temples in Tamil Districts.

The three maps of ancient Tamil land, one relating to South India, another to Chola territory and the third to Ceylon prepared by Sri N. M. Subbaraya Mudaliar of Palur in Chingleput District are brought to the notice of the trustees. The cost of the three maps is only Rs. 10/-. As they contain the ancient famous villages, towns, cities, mountains and rivers referred to in the Thevaram and Thiruppasurams, these will be very useful for the temple authorities and worshippers. The purchase of the maps by the temple authorities is, therefore, recommended.

Copies can be had from the author, Sri N. M. Subbaraya Mudaliar, Palur, Palur P.O., Chingleput Dt.

(Sd.) A. BALAKRISHNAN,
Secretary.

P. P.-MS-84-2,000-4-9-46

Proceeding of the Director of Public Instruction, Madras.

R. O. C. N. 1340 G-40 Dated 1-8-1940.

Sub:—

MAPS OF ANCIENT TAMIL LAND-BROUGHT TO NOTICE OF COLLEGES AND HIGH SCHOOLS.

The Director wishes to bring to the notice of the undermentioned Colleges and High Schools in the Tamil Districts, the three maps of ancient Tamil land-one relating to South India, another to Chola territory and the third to Ceylon prepared by Sri N. M. Subbaraya Mudaliar of Palur in Chingleput District. The maps contain the ancient famous villages, towns, cities, mountains and rivers referred in the Sangam literature and the Devaram (Prabantham) literature of the 7th and 9th centuries of the Christian era. The price of one set of the 3 maps is Rs. 10.

2. The Divisional Inspectors and Inspectresses of Girls' Schools are requested to take necessary action in regard to High Schools.

B. Somasundara Rao.

for Director of Public Instruction.

True Copy forwarded by Order

(Sd.) V. S. Ramachandran,

Superintendent.

To

The Divisional Inspectors except Guntur Division.

The Inspectresses of Girls' Schools except 1st and 2nd circles.

The Principal, Teachers' College, Saidapet and Lady Willingdon Training College, Madras.

The Principal, Annamalai University Tamil College, Annamalainagar.

Copy to Sri. N. M. Subbaraya Mudaliar, Palur Post, Chingleput District.

[*True Copy*]

உ

சிவபெருமான் திருவருள் துணை.

தமிழ்வேதத் தலயாத்திரைப் படங்கள் மூன்று.

அவை :—

1. தமிழ்நாட்டுப் படம்
2. சோழநாட்டுப் படம்
3. ஈழநாட்டுப் படம்

உத்தமத் தமிழன்பர்களே! உண்மைத் திருத்தொண்டர்களே!

நீங்கள் இப்படங்களைப் பார்த்திருக்கிறீர்களா? இல்லையானுல் உடனே வாங்கிப் பாருங்கள். இவை தமிழராயுள்ளார் யாவர்க்கும் அவரவர் செய்யும் நற்கருமங்களுக்கெல்லாம் துணையாகி நற்பலன்களைத் தருவனவா யமைந்திருக்கின்றன. இவை எல்லாராலும் எளிதில் எழுதிப் பதிப்பித்துவிடக்கூடியவையல்ல. வேறு யாரும் இந்த முறையில் எழுதிப் பதிப்பிக்கவுமில்லை. எனக்கும் இருபது வருடங்கள் யாத்திரை செய்து மிகுந்த பொருட் செலவையும் பலவகையான கஷ்ட நஷ்டங்களையும் ஏற்றுக்கொண்டதன் பயனுகத்தான் இப்பொழுது எழுதிப் பதிப்பிக்க முடிந்தது.

இவற்றைப் போன்ற தமிழ்நாட்டுத் தரைப்படங்கள் முற்காலங்களில் இல்லாமையால் அல்லது கிடைக்காமையால் நம்முடைய முன்னோர்களில் எண்ணிறந்தோர் எண்ணிறந்த கஷ்டங்களையும் நஷ்டங்களையும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே அநுபவித்து வந்திருக்கிறார்கள். இக்காலத்தவர்களுள்ளும் மிகப் பலபேர்கள் அக்கஷ்ட

நஷ்டங்களை அடைந்தே வருகின்றார்கள். இனிமேலாகிலும் இவ்வாறான குறைகள் நம்மவர்களுக்கு நேராமலிருக்க நம்மால் இயன்ற உதவிகளைச் செய்யவேண்டும் என்றே இப்படங்களைத் தமிழ்வேதப் பற்றுடையார்களுக்கு மாத்திரந்தான் என்பதில்லாமல் வேறு பலவகைப் பற்றுடையார்களுக்கும் நற்பலன்களைத் தரத்தக்க முறையில் எழுதிப் பதிப்பதிப்பித்துக் குறைந்த விலைக்கே விற்று வருகிறேன்.

2.

திருக்கோயில்களின் நிர்வாகத்தர்களே! திருப்பணியாளர்களே!

நீங்கள் முற்பிறப்புக்கள் பலவற்றிற் செய்த நல்வினைகளின் பயனாய் வாய்த்தவும் மறுமைப் பயன்களுக்கெல்லாம் நல்விதைகளாவனவும் மிகவும் பெரியவும் அரியவுமான பொருட் பொறுப்புக்களையும் திருத்தொண்டுகளையும் மேற்கொண்டு; இவற்றை அறநெறியில் மாத்திரமன்றிப் பத்திநெறியிலும் வழிபாட்டு முறையிலும் வழுவாமற் திறம்படக் காப்பாற்றியும் விருத்தி செய்தும் வருகின்றீர்கள். இவற்றிற்காக உங்களாற் செய்யப்பட்டு வருகின்ற பிரசாரத் துறைகளோ மிகப்பல. என்றாலும் அவற்றிற்கின்றியமையாதவைகளாயுள்ள கருவிகளிற்சில குறையாகவே யிருந்து வருகின்றன. அக்குறையை நிரப்புபவைதாம் மேலே காட்டிய பெயர்களைக் கொண்ட மூன்று படங்களும், இப்படவிளக்கமாகிற நூலும். இவை தொகையளவிற் சிலவேயாயினும் இவற்றால் வரும் பயனளவோ மதிப்பிட முடியாதவை.

3.

மக்களாய்ப் பிறந்தார் அனைவருள்ளும் இவ்வுலக வாழ்க்கையை மேன்மேலும் அனுபவிக்க விரும்புகின்ற

வர்கள் அவற்றிற்காகச் செய்துவருகின்ற பல்வேறு தொழிற்றுறைகளாலுண்டாகும் எவ்வகைப்பட்ட மனக் கவலையையும் மாற்றி, அவ்வின்பங்களையெல்லாம் எண்ணிய வெண்ணியாங்கெய்தப் பெறுவதற்கும், இவ்வுலக வாழ்க்கையை அறவே வெறுத்தவர்கள் எண்ணற்கரியவும் தாங்கற் கரியவுமாகிற துன்பங்களை யெல்லாம் தருவதான இப் பிறவிப் பெருங் கடலை நீந்தி, என்றும்பிறவா நிலையதாகிய பேரின்பக்கரையிலேறுவதற்கும் "தனக்குவமை யில்லா தான் றாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றலரிது" எனவும் "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்" எனவும் மற்றும் இவைபோல்வன வாகவும் உண்மை நூல்களிற் கூறப்பட்டுள்ளபடி எல்லாம் வல்ல இறைவன் திருவடியை என்றும் மறவா திருத்தலே நேரானவழி எனவும் அங்ஙனம் மறவாமலிருப்பதற்குச் சிறந்த சாதனமாயுள்ளது அவ்விறைவனது உருவவழி பாடே எனவும் பழவினைப் பயனை அறிந்து அதனைத் தளராவூக்கத்துடன் மேன் மேலுஞ் செய்யப் போவாக் கொண்டு வருகின்றனர்.

இவர்களால் விரும்பப்படும் இவ் விறையுருவ வழி பாட்டுச் செயல் நம் தமிழ் நாட்டவர்களால் இத் தெய்வத் தமிழ்மொழியிற் பேசவும் எழுதவும் துவங்கிய அக்காலந் தொட்டே உயிர்க்குறுதி பயக்கத்தக்க மிகமேலான செய்கை என்று நன்குணரப்பட்டு அவ்விறைவனாலும் அவ் விறைவன்றன் பேரருளைப் பெற்ற மெய்யடியார்களாலும் கூறப்பட்டுள்ள அருள்நூல்களின் செந்நெறிப்படியே தந்தம் உடற்கிறுதி நேருங்காலத்தும் விடாமற்செய்து போற்றப்பட்டு வந்தவோர் திருப்பணியாகும். ஆதலால், அவர்களின் வழி வழி வந்தோராகிய நம்மவர்கள் அதனைத்

தாமும் செய்யப்போவாக் கொள்ளுதல் வான்முறையேயா கும். அதைப்போலவே இவர்களெல்லாம் அத்திருவுருவ வாலாறுகளேயும் அவ்வுருவங்களேயெல்லாய் தம்முட் கொண்டிருக்கிற கோயில்களின் வரலாறுகளேயும் எளிதாக வும் தெளிவாகவும் அறியும்படிச் செய்விப்பதும்; அம்மெய் யடியார்களின் வழி வழி வருபவர்க்கெல்லாம் பழமைப் பட்ட கடமையாகின்றது. ஆகவே அவ்வடியார்களிற் சிறந்தாரது பாடல்களே யெல்லாம் தமிழ்வேதமாகவே கொண்டு போற்றும் அடியேனும் அவற்றை ஒருவாறுக எடுத்துக் கூற விரும்புகிறேன்.

4.

பேருளுடைமை முதலான எண் குணங்களேயும் இயல்பாகவுடைய சிவபெருமான் சகல ஆன்மாக்களேயும் இம்மையில் தத்தமக்குள்ள குற்றம் குறைகளேப் போக்கிக் கொண்டு இனிது வாழும்படியும் மறுமையில் என்று மழியாப் பெரும்பேறு பெற்று உய்யும் படியும் எளிதிற் செய்விக்க வல்லது சிவ வழிபாடு ஒன்றே என்பதைச் சிவாகமங்களிற்றூமே தெளிய வுரைத்தருளிய தல்லாமல்; இக்கருத்துக்களேயே தமிழ்வேதத் திருமுறைகள் முத லான உண்மைநூல்களில் தம் அருமைத் திருத்தொண் டர்களேக் கொண்டும் வலிவுறுத்திப் பாடும் படிப் பேரருள் புரிந்துள்ளார். பின்னும் ஒரோர் காலங்களில் வெவ்வேறு காரணங்களால் தாமே மேற்கொண்டருளிய திருவுரு வங்களோடிருந்து தம்மைத் தாமே பூசித்தும் காட்டியுள் ளார்.

இத்தனே வருஷங்களுக்கு முன்தான் அது நிகழ்ந்தது என்று அறுதியிட்டுக்கூற முடியாவிடினும் மிகப் பல நூற்

ஞூண்டுகளுக்குமுன் அல்லது மூன்று ஊழிகளுக்குமுன் நிகழ்ந்ததாய்ப் பல உண்மைநூல்களிலிருந்து நன்கறியப் படுகிற முதலூழி அல்லது பெரியவோரூழியின் முடிவில் "ஆதிமாதவ முனி"வராகிய அகத்தியர் என்னும் அமர முனிவர் சிவபெருமானுடைய திருவருளின்படியே இத் தென்னாட்டிற்கு வந்து இங்கே அவ்வூழியிற் பிழைத்திருந் தாரையும் பிறரையுங் கொண்டு இத்தமிழ் நாட்டைச் சீர்ப் படுத்தி இதன் உள்நாடுகளிற் சிறந்த பாண்டிநாட்டின் ஊர்கள் நாடுகள் பலவற்றிற்கும் தலைநகராய் இப்பொழுதும் உள்ள குமரித்துறைக்குத் தெற்கே அப்போதிருந்த தென் மதுரைக் கண்ணே தமிழ்ச்சங்கம் ஒன்றை முதலில் தாபிக்க எண்ணி, இத்தமிழ்நாடு முழுவதிலும் அரசர்களும் புல வர்களுமா யிருந்தாரைக் கூட்டி அதற்குத் "திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளை"யே அவைத் தலைவராயிருக் கும்படி வேண்டி அவ்வாறே எழுந்தருளி வீற்றிருக்கவும் பெற்று அவரைத்தொழுது வணங்கி அதன் பின்னரே அம் முதற்சங்கத்தைத் துவக்கிச் சிறப்புற நிகழச்செய் தார். தாம் அச் சிவபிரானிடத்தில் தெளியக் கேட்டறிந்த வாறே தமிழ்மொழியின் இலக்கணங்களை யெல்லாம் விரிவாயமைத்து அகத்தியம் என்ற பெரிய வோரிலக்கண நூலை யியற்றித் தமிழ்நாட்டவர்களுக்குத் தந்தருளினர். தொல்காப்பியர் முதலான உத்தம மாணவர்களுக்குத் தமிழ் மொழியின் இலக்கணங்களைப் போதித்தருளினர். இவை போன்ற அளவிறந்த சிறப்புக்களையுடைய இம்முனிவர் பெருமான் இத்தமிழ் நாட்டிலிருந்தும் பிறநாடுகளிலிருந் தும் வந்து தம்மைச் சார்ந்த அரசர் முதலாயினர்க்கெல் லாம் அவரவர்க்கு வேண்டிய வரங்களையும் உதவிகளையும் அளித்துவந்த தல்லாமல் அவர்களுக்கெல்லாம் இவ்வுல கியலுக்கு மாத்திரமன்றி அம்முத்தி நெறிக்கும் சாதனமா

யிருப்பது இச்சிவ வழிபாடு ஒன்றே என்று போதித்தும், அச்சிவபெருமானை வழிபடுவதற்கு இன்றியமையாத்திரு வுருவம் இச்சிவலிங்க வடிவமே என்று அதனைப் பொதி யில்மலை குமரித்துறை முதலாகப் பற்பல விடங்களிற் றுபித்துப் பூசித்துக் காட்டியும் நல்வழிப் படுத்தியுள்ளார். இவரால் முதல் முதலாய்த் தாபித்து வழிபடப்பட்ட சிவ வடிவத்தைக் கொண்டிருக்கிற அவ்விரண்டு தலங்களும் அகத்தியர்கூடம் அகத்தீச்சுரம் என்ற பெயர்களுட னேயே விளங்கி வருகின்றன. இவ்வாறே இவரால் இவ் வுலகத்தில் வழிபடப்பட்ட அவ்வளவு சிவ வடிவங்களும் இவர் பெயருடனேயே அழைக்கப் பெறுகின்றன.

இவரைப் போலவே மற்ற முனிவர்களும் பதினெண் கணத்தவர்கள் என்றழைக்கப் படுகின்றவர்களுள் ஒவ்வோ ரினத்தவர்களும் ஓரறிவு முதல் ஐயறிவீறாகவுடைய மற் றைய உயிரினங்களிற் றோன்றிய பற்பல மெய்யடியார்களும் ஒரோர் காலத்தில் இப்பூவுலகத்தில் கூட்டமாகவும் தனித் தனியாகவும் வந்திருந்து; அவரவர்க்குத் தகுந்ததெனத் தோன்றிய விடங்களிலெல்லாம் தாந்தாமே சிவலிங்கம் தாபித்தும் எவராலும் தாபிக்கப் படாமல் தானே தோன் றியதாயுள்ள சிவலிங்கங்களைக் கண்டறிந்தும், பூசித்துத் தத்தமக்கிருந்த குற்றங்களையும் குறைகளையும் போக்கிக் கொண்டதல்லாமல் மேலும்பல வரங்களையும் பெற்றுப் பேரின்ப மடைந்துள்ளரர்கள்.

ஆறறிவுள்ள மக்களினத்திலும் படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டு வருகின்ற உயர்குடிகளாகிய சேர சோழ பாண்டியர் என்னும் அரசர் முதலாகவுள்ள நான்கு குலங்களுள்ளும்; மற்றும் தாந்தாம் பெற்ற வரத்தாலும் பலத்தாலும் உலகமுழுவதையும் ஆண்ட பேரரசர்கள் குறு

நிலமன்னர்கள் வெவ்வேறு வகைகளில் ஆட்சியும் அதிகாரமும் உயர்வும் பெற்றவர்கள் ஆகிய இவர்களுள்ளும் அளவில்லாத உண்மைத் திருத்தொண்டர்கள் தோன்றித் தத்தம் தகுதிகளுக் கேற்ற வகைகளில் சிவலிங்கம் தாபித்துப் பூசித்துத் தாந்தாம் விரும்பியவை யெல்லாவற்றையும் பெற்று இணையிலாவின்ப மெய்தினார்கள். இங்ஙனம் வழிபட்ட தல்லாமல் இவர்களில் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி முசுகுந்தச் சோழர் கோச்செங்கட் சோழர் பரசிராமர் மகேந்திரப் பல்லவர் ஆகிய இவர்களும் இவர்கள் காலங்களிலும் அவற்றிற்கு முன்னும் பின்னுமாகவும் தோன்றிய அளவில்லாத திருத்தொண்டர்களும் மேலே சொன்ன அவ்வளவு பேர்களாலும் தாபித்துவழிப்படப் பெற்றிருந்த அவ்வளவு சிவ வடிவங்களுக்கும் அவையவையிருந்த இடங்கள் இவரிவர் ஆற்றல் பொருள்நிலைமை காலவசதி ஆகியவைகளுக் கேற்றவாறு ஆலயங்கள் அமைத்தும் அவற்றை விதிப்படி வழிபடுவதற்கேற்ற திருத்தொண்டர்களை நியமித்தும் தினப்பூசைமுதல் ஆண்டு விழாவரையில் ஒவ்வொரு திருப்பணியையும் சிறப்பாகச் செய்வித்தும் அவைஎன்றென்றும் மேன் மேலும் சிறப்பாக நடந்து வருவதற்கேற்ற நிலம்பொருள் ஆகியவைகளை மூலாதாரமாக வைத்துச் சாசனங்களும் செய்து வைத்தும் திருவருட்டுணையால் முத்தி நெறியில் முன்னின்று என்றும் பிறவா நிலையை எய்தினார்கள்.

5.

இவ்வாறுகப் பிறப்பினங்கள் எவ்லா வற்றினுந் தோன்றிச் சிவவழிபாடு செய்து நற்பேறு பெற்ற மெய்யடியார்களில் மிகப் பலபேர்கள் தாந்தாம் தாபித்த சிவலிங்க வடிவத்தைச்சூழத் தத்தமக்கு விருப்பமான மற்றும் பல

சிவவடிவங்களையும் தாபித்துப் பூசித்திருந்தனர். அவர்களைப் போலவே சிவாலயம் எடுப்பித்தவர்களும் அவ்வத் தலத்தில் முதல் முதலாய்த் தோன்றியவையான திருமூலலிங்க வடிவங்களுக்கு மாத்திரம் என்பதில்லாமல் அவற்றைச் சூழ வமைக்கப் பட்டிருந்த மற்றும் பல திரு வடிவுங்களுக்கும் கைதேர்ந்த வேலைப்பாடுகளுடன் உறுதியாகவும் அழகாகவும் விளங்கும்படி ஆலயங்கள் அமைத்துள்ளார்கள். அவ்வாறமைக்கப் பட்டுள்ள சிவாலயங்கள் ஒவ்வொன்றிலும் வழிபாட்டுக் குரியவைகளாய்த் தாபிக்கப் பட்டிருக்கிற வடிவங்கள் அவ்வளவும் தம்முள் இரண்டு வகைப் படுவனவாயிருக்கின்றன.

அவை:—1. அருளுருவங்கள். 2. அன்புருவங்கள்.

அவற்றுள் முதலாமவை:—விநாயகரிடமிருந்து துவங்கித் திருமூலத்தானேசுரர் முதல் வயிரவர் ஈறாகக்கொண்டு வழிபடப் பெற்று வருகின்ற வடிவங்கள்.

அவையாவும் முற்றுமுணர்தல் முதலான எண் குணங்களையும் இயல்பாகவுடைய சிவபெருமான் தன்னுடைய திரௌபவ சத்தியால் ஒடுக்கப் பட்டிருந்த ஆன்மாக்கள் யாவற்றிற்கும் அதனதன் பழவினைக்கேற்ற தனு கரண புவன போகங்களை அளித்தருள வேண்டிப் படைத்தல் முதலான ஐவகைத் தொழிலையும் மீண்டும் நடத்துவிப்பதற்காகவும் அவ்வுயிரினங்களுள்ளே குலால சக்கரம் போலவும் ஆற்றுநீர் போலவும் பழையவும் புதியவுமாய் வந்துகொண்டே யிருக்கின்ற இப்பிறவித் துன்பங்களுக் கஞ்சியும் வேறு பல நன்மைகளை விரும்பியும் தம்மைப் பேரன்புடன் வழிபட விரும்புவார்க்கெல்லாம் சிவ வழிபாட்டின் தன்மைகளைத் தாமே செய்து காட்டுவதற் காகவும் அவ்வாறே வழிபடும் உண்மை யடியார்களுக்கெல்

லாம் அவரவர் வேண்டிய வேண்டியாங்கருள்செய்வதற்காகவும் அங்ஙனம் வழிபடும் அடியார்களுக்கும் மற்றும் பல வுயிரினங்களுக்கும் துன்பம் விளைவிக்கின்ற தீவினையாளர்களைத் தண்டித்து நல்வழிப் படுத்துவதற்காகவும் என்று ஓரோர்காலத்துக் கொண்டருளிய திருவடிவங்கள்.

அவைகள்தாம் கரசரணாதிகளைக்கொண்டு எடுத்தல் நடத்தல் முதலான தொழில்களைச்செய்த வடிவங்களே. எனினும், மாயையாதியாகவுள்ள காரணப் பொருள்களைக் கொண்டு பிறரால் படைக்கப்பெறும் மற்றத் தேவர்களது சுத்தாசுத்த வடிவங்களைப்போலாகாமல் தன் வயத்தனாகிய சிவபெருமான் தன்னுடைய கருணைமிகுதியாற் றானே கொண்டருளிய சுத்த அருள் வடிவங்கள். ஆதலால் அவை ஒவ்வொன்றும் அச் சிவபெருமானை வழிபடுவதற்குத் தகுதியான திருவுருவங்களாயின.

இரண்டாமவை :—நந்திமாகாளர் முதல் சண்டேசுரரீறாகக்கொண்டு வழிபடப் பெறுகின்ற வடிவங்கள். இவையாவும் செம்பிற் களிம்புபோல அனாதியாகவே பாசத்தாற் கட்டுண்ட ஆன்மாக்கள் அளவிலாதவற்றுள் மிகப் பல வுயிர்கள் அததற்கெனத் தரப்பெற்ற பல்வேறு பிறப்புக்களில் அறிந்தும் அறியாமலுமாய்ச் செய்த நல்வினைகளின் பயனாய் மேன்மேலும் உயர்பிறப்புக்களெய்திப் பழகுதல் கேட்டல் கற்றல் தேர்தல் தெளிதல் ஆகிய நன் முயற்சிகளால் தொடுமணற்கேணியி னூற்றுப்போல நாளுக்குநாள் நல்லுணர்வு பெருகப்பெற்று எவ்வுயிரும் சிவபெருமானுடைய திருவருளின் துணையில்லாமல் எத்தொழிலையும் செய்ய முடியாததோடு எவ்வகைத் துன்பத்தினின்றும் விலகவோ அல்லது விலக்கவோ முடியாத நிலையிலேயே யிருப்பனவெனவும் உள்ளன்புடன் சிவத்தொண்டு

செய்யும் நல்லுயிர்களே தாந்தாம் வேண்டிய வேண்டியாங் கெய்தப் பெறுவனவெனவும் நன்குணர்ந்து அச்சிவபிரானுடைய திருவடிகளைக் கனவினும் மறவாதவைகளாய்த் தத்தமக்கு வாய்த்த திருத்தொண்டுகளைச் செய்து பக்குவப்பட்டிருந்து இவ்வீற்றுப் பிறப்பில் உலகப்பற்றும் உடற்பற்றும் அணுவளவுமின்றி இணையற்ற பேரன்பினால் மற்றெவரும் மனத்தால் நினைத்தற்கும் அருமையானவும் வேறெவரும் என்றும் செய்தறியாதனவுமான மிகப்பெரிய திருத்தொண்டுகளைச் செய்தும் தாம் செய்ததல்லாமல் மற்றுமுள்ளாரையும் அன்போடு விளித்து உங்கள் வாழ் நாள்களுக்குள் இடையிடையே வாய்க்கின்ற சிறுசிறு காலம் தருதி யாகியவற்றையும் வீணாக்காமல் இயன்ற வியன்ற வரையிலாவது திருத்தொண்டுகளைச் செய்து வருவீர்களானால் நீங்களும் இன்னின்ன நற்பலன்களை யெல்லாம் அளிக்கப் பெறுவீர்கள்; இப்பலன்களையெல்லாம் தருபவரான சிவபெருமான் முடிவிலாற்றலுடையரா யிருப்பதோடு பேரருளுடையராயும் இருப்பவர் என்பது முதலான அளவற்ற உண்மையுபதேசங்கள் நிறைந்திருக்கிற (தேவாரம் முதலான பன்னிரு திருமுறைகளிலுமுள்ள) திருவருட் பாடல்களைப் பாடியருளியும் அங்ஙனம் பாடியருளப்பட்ட உண்மை யுபதேசங்களின் உட்கருத்துக்களாகிற பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களின் உண்மை வரலாறுகளை யெல்லாம் எவ்வகைப்பட்ட நேரான வினாக்களுக்கும் நல் விடைகள் தெரியக்கூடிய வகைகளில் உரை அனுமானம் காட்சி என்னும் முத்திறத்தாலும் தெளிவுபடுத்திச் சைவசமயமே சமயம் என்ற முடிவை விளக்குவனவாகிய சித்தாந்த சாத்திரங்களை யியற்றி யருளியும் தம்மைச் சார்ந்திருந்த பக்குவான்மாக்களையெல்லாம் பார்வை யுபதேசம் பரிசம் ஆகியவைகளால்

நல்வழிப் பத்தி வீட்டுப்பேறெய்தும்படிச் செய்தும் தாமும் இணையிலாச் சிவப்பேறெய்தி யின்புற்றிருப்பவர்களாகிய உண்மைத் திருத்தொண்டர்களின் திருவுருவங்கள்.

இவ்வுருவங்களெல்லாம் நம்மைப் போன்ற மக்களிடத்திலிருந்தும் மற்றுஞ்சில பிறப்பினங்களிலிருந்தும் தோன்றியவைகளே எனினும் இப்பியிற்றோன்றுகின்ற முத்துக்கள் அவ்விப்பியைப் போன்ற கழிபொருளே யாகாமல் மண்ணரசர்க்கேயன்றி விண்ணரசர்க்கும் அணிகலன் களாகிப் போற்றப் பெறுதல்போல; இவ்வுருவங்களும் தற்போத மிகுதியாற் காமாதி குணங்களின் வசப்பட்டு மேன் மேலும் இழிபிறப்புக் கேதுவானவைகளையே செய்து பிணி மூப்புச் சாக்காடுகளுக்கஞ்சி யுழலும் ஏனையோரது தீவினைக் கிடாய்வாய்த்த புன்புலாலுடம்பைப்போ லாகாமல் இருவினையும் ஒத்துச் சிவபெருமானுடைய திருவருணோக்கத்திற்கு இலக்கான அப்போதே வேதகத்திட்ட இரும்பு பொன்னானாற்போலப் பண்டைத் தவத்தின் பயனாய் வாய்க்கப்பெற்ற அந்நல்லுடலுக்கிருந்த சிறு குற்றங்கள் சிலவும் நீங்கிப் பசு கரணங்களெல்லாம் பதிகரணங்களாய் மாறி அன்பே யுருவாயமையப் பெற்றுச் சிவபெருமானுக்கு விருப்பமானவையென்று தெரிந்தவற்றையே செய்து அவரால் நேரே வந்து விரும்பி யாட்கொள்ளவும் பெற்ற அவ்வுண்மையடியார்களின் அன்புருவங்கள். ஆதலால், இவை யாவும் மேலே சொன்ன சிவ வடிவங்களோடொப்பச் சிவ வழிபாட்டிற்கு இன்றியமையாத் திருவுருவங்களாயின.

இவ்வாறாய இவ் விருவகை யுருவங்களின் மொத்தத் தொகையை இததானென்று வரையறுத்துக் கூறவேண்டுமானால் சிவபெருமான் ஒருவரால்தான் இயலும். ஆதியந்தம் இல்லாமல் என்றும் இருப்பவரும் எல்லாவுயிர்களுக்-

கும் அருள்செய்பவரும் அவரேயாதலால் எந்தெந்தக் காலங்களில் எவ்வெவ்விதமான வடிவங்களைக் கொண்டோம் இனியும் கொள்வோம் என்பதும், ஆன்மாக்கள் அளவிலாதனவாவதோடு அவற்றின் வினைகளும் வெவ்வேறு திறத்தன வாதலாலும் அவற்றுள் பெத்தான்மாக்கள் உள்ளவரையில் ஆட்கொள்ளும் செயலும் நீடித்துக் கொண்டே யிருக்குமாகையாலும் எத்தனை உயிர்களை ஆட்கொண்டு நற்பதம் தந்தோம் இனிமேலும் எத்தனையெத்தனை யுயிர்களை எந்தெந்தக் காலங்களில் ஆட்கொள்ள இருக்கிறோம் என்பதும் அவர்க்குத்தானே தெரியும்? ஆகவே முக்காலங்களுக்கும் உரியனவாகிய ஆ...த்சகாய மூர்த்தம் குருமூர்த்தம் என்பனபோன்ற வடிவங்களையும் உள்ளடக்கியே சிவ வடிவங்கள் 64 எனவும், முப்போதுந் திருமேனி தீண்டுவார் அப்பாலுமடிச்சார்ந்தார் என்பன போன்ற தொகையடியார்களின் வடிவங்களையும் உள்ளடக்கியே திருத்தொண்டர்களின் வடிவங்கள் 72 எனவும் நம் முன்னோர்கள் தொகை கூறியுள்ளார்கள்,

6.

ஆகப் பொதுவாக எண்ணப்பட்ட இந்நூற்று முப்பத்தாறு என்னும் தொகையுள் அடங்கிய இவ்விருவகைத் திருவுருவங்களின் வரலாறுகளெல்லாம் அவ்வக்கோயில் களிலும் பிறவிடங்களிலு மிருக்கின்ற சிலைகள் உலோகங்கள் · மதிற்சுவர்கள் பத்திரங்கள் இவற்றிற் செய்துள்ள சாசனங்களிலும் அவற்றை ஒற்றியெடுத்தும் பார்த்தெழுதியும் பதிப்பித்துள்ள நூல்களிலும் சங்கநூல்கள் அவற்றின் உரைகள் தேவாரம் முதலாகவுள்ள தமிழ்வேதப் பன்னிரு திருமுறைகள் சிவஞானபோதம் முதலான சித்தாந்த சாத்திரங்கள் இவற்றின் உரைகள் இவற்றின் கிளைச்சாத்திரங்கள்

சதாசிவரூபம் சிவதருமோத்தரம் முதலான மொழி பெயர்ப்பு நூல்கள் இவற்றையெல்லாம் ஆதாரமாகக் கொண்டுள்ள தாயுமான சுவாமிகளின் பாடல்கள் இவர் பாடல்களுக்கு முன்னும் பின்னுமாய்த் தோன்றிய பல் வேறு தோத்திரப் பிரபந்தங்கள் அகப்புறப் பொருளிலக் கண நூல்கள் நீதிநூல்கள் சோதிட நூல்கள் வைத்திய நூல் கள் தமிழ்நாட்டிலும் பிறபாஷை நாடுகளிலுமுள்ள அவ்வம் மண்டலச் சிறப்பு நூல்கள் அவற்றின் உரைகள் தமிழ்ப் பெரும் புலவர்கள் எழுதிய பற்பல வரலாற்று நூல்கள் வடமொழியிலுள்ள வேதங்கள் சிவாகமங்கள் இவற்றை ஆதாரமாகக் கொண்ட பலசிறந்தநூல்கள் 18 புராணங்கள் வடமொழி, தமிழ்மொழி யிரண்டிலுமுள்ள அவ்வத் தலபுராணங்கள் பாரதம், இராமாயணம் முதலான பிற நாட்டரசர்களின் வரலாற்று நூல்கள். இவைகளி லும் மற்றுமுள்ள் நூல்களிலும் அவ்வந்நூனடைகளுக் கேற்றவாறு சுருக்கமாகவும் விரிவாகவும் கூறப்பட்டிருக் கின்றன.

7.

இதுவரையில் சிவாலயங்கள் எல்லாவற்றிற்கும் பொது வாகவுள்ள வரலாறுகளுக்கு அடிப்படையாகக் கூறப்பட் டவற்றுள் பெரும்பாலானவை விஷ்ணுவாலய வரலாறு களுக்கும் அடிப்படையே. சிவாலய வழிபாடுகள் எல்லாம் பல யுகங்களுக்கு முன்னிருந்தே துவங்கி நடைபெற்று வருகின்றன என்று அவ்வத்தல புராணங்களிலும் பொதுப் புராணங்களிலும் கூறப்பட்டிருப்பதைப்போலவே விஷ் ணுத்தல புராணங்களிலும் அவரையே முதன்மையாகக் கொண்டு கூறப்பட்டுள்ள நாலாயிரப் பிரபந்தப் பாடல்களி லும் பிற நூல்களிலும் கூறப்பட்டிருக்கின்றன.

தொல்காப்பியம் முதலான மிகப்பழைய இலக்கண நூல்களிலும் பரிபாடல் முதலான பல இலக்கிய நூல்களி

லும் சிவாலயங்களிலுள்ள சிவவழிபாட்டுத் திருவுருவங்களிற் சிலவற்றின் வரலாறுகள் வழிபாடுகள் ஆகியவற்றைக் கூறுவதுபோலவே விஷ்ணுவாலயங்களிலுள்ள வழிபாட்டுத் திருவுருவங்களிற் சிலவற்றிற்கும் கூறப்பட்டிருக்கின்றன. தமிழ் நூல்களிற் கூறப்பட்டிருக்கிறபடி முச்சங்க காலங்களிலும் இருந்த தமிழ்ப்பெருந் தொண்டர்களில் அகத்தியர் முதலான தனிப்பெருந் தொண்டர்கள் சிவவழிபாடு செய்தார்கள் எனவும் தலைச்சங்க காலத்திலிருந்த பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் காலத்துக்கு முன்னரே சிவாலயங்கள் அமைக்கப்பட்டிருந்தன எனவும் அறியப்படுதல் போலத் திருமாலின் திருவுருவங்கள் இத்தமிழ் நாட்டில் யாரியாரால் முதல் முதலாய்த் தனியாகத் தாபித்து வழிபடப்பட்டன? யாரியார் காலங்களுக்கு முன்னரே திருமாலுக் கென்றுதனியே ஆலயங்கள் அமைக்கப்பட்டிருந்தன? என்று சிலர் வினவக்கூடும். அவர்கள் திருமால் வழிபாட்டின் முதற்றோற்றத்திற்கும் அவ்விஷ்ணுவாலயங்களின் பழமைக்கும் ஆதாரமாயுள்ளவைகளையும் மற்றும் அவ்விஷ்ணுவாலயங்களிற் றிருமால் வழிபாட்டிற்குரியவைகளாய்த் தாபிக்கப்பெற்றுள்ள அருளுருவங்கள் அன்புருவங்கள் அவற்றின் பெயர்கள் மொத்தத்தொகை வழிபாட்டுமுறை அவற்றை விவரித்துக் கூறும் நூல்கள் ஆகியவைகளையும் அவற்றையெல்லாம் கற்றுவல்ல அம்மதாசாரியர்களிடத்தும் மற்றும் பல பெரும்புலவர்களிடத்தும் கேட்டும் கற்றும் அறிதல் மிகவும் நலம்.

8.

சைவாகமங்களின் விதிப்படிச் சிவாலயங்களில் வைத்து வழிபடப்படுகின்ற அருள்வடிவங்களுள் திருமால் வடிவமும் ஒன்று. அங்ஙனமிருந்தும் அத்திருமால் வழிபாடு

ஒன்றே மற்றெத்தெய்வ வழிபாட்டினும் முதன்மையானது அல்லது மேலானது எனக் கொண்டோரால் அதற்கெனத் தனியேயமைத்து வழிபடப்பட்டு வருகின்ற விஷ்ணுவாலயங்கள் இத்தமிழ் நாட்டில் பற்பல உள்ளன.

இவற்றைப் போலவே சிவாலயங்களிலுள்ள சிவவழிபாட்டுத் திருவுருவங்களைச் சேர்ந்தவைகளாயும் தொல்காப்பியர் காலத்துக்கும் முன்னிருந்தே எல்லாராலும் வழிபடப்பட்டு வருகின்றவைகளாயுமுள்ள முருகக்கடவுள் கொற்றவை இவர்களின் வடிவங்களுக்கும் இன்னும் விநாயகர் வீரபத்திரர் வயிரவர் ஐயனர் சப்தமாதர்கள் இவர்களின் வடிவங்களுக்கும் வெவ்வேருகக் கட்டப்பட்ட ஆலயங்களும் இத்தமிழ் நாட்டில்எண்ணிலாதனவுள்ளன. இவையெல்லாம் அதனதன் இடம் அமைப்பு பெயர் வழிபாட்டு முறை ஆகியவைகளால் சிற்சிலர்க்குச் சிவாலயத்தின் வேறுபோலக் காணப்படினும் இவ்வாலயங்களின் மூலஸ்தானத்தில் வைத்து வழிபடப் பெறுகின்ற வடிவங்களெல்லாம் சிவாலயங்களிலுள்ள அருள்வடிவங்கள் 64 ஐயும் அன்புருவங்கள் 72 ஐயும் சேர்ந்தனவாகவே யிருத்தலால் இவைகளும் சிவாலயங்கள் எனவே கொள்ளப்படும். மேலும் இவ்வாலயங்களின் வழிபாட்டன்பர்களாவது இக்கடவுளரைப் பாடித்துதித்த அருட்பெருந்தொண்டர்களாவது இத்தெய்வங்களின் வழிபாடே சிவவழிபாட்டினும் வேருனதென்றோ முதன்மையானதென்றோ கொள்ளவும் இல்லை. ஆகவே, சிவாலயங்களுக்கெனப் பொதுவா யெழுதப்பட்ட வரலாறுகளின் அடிப்படையிலேயே இவ்வடிவங்களின் வரலாறுகளும் அடங்குவன. ஆதலால் இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே வரலாற்றுப் பீடிகை எழுதவேண்டியது அவசியமல்லாத தாகிவிட்டது.

9.

இங்கே எடுத்துக் கூறிய சாசனங்கள் நூல்கள் இவை ஒவ்வொன்றும் மேலே சொன்ன கோயில்கள் அவற்றிலுள்ள வடிவங்கள் ஆகிய அவ்வளவின் வரலாறு களையும் தொடர்ச்சியாய்க் கூறுவனவல்ல. அவற்றுட் சிலவும் பலவுமாகிய வரலாறுகளையே இவற்றுட் சிலவும் பலவுமாகிய சாசனங்களும் நூல்களும் கூறுகின்றன. இவற்றுள் எந்தெந்த சாசனங்களும் நூல்களும் எந்தெந் தக் கோயில்கள் அல்லது வடிவங்களின் வரலாறுகளை விவ ரிக்கின்றன? என்று மேற்போக்காய் அறிவதற்காகவேனும் அவ்வளவையும் ஒருவர் கற்றுத் தேர்தல் என்பது அவரது ஒரே பிறப்பில் இயலாதகாரியம். ஆகவே இவற்றுள் எந்தெந்த நூல்களில் யாரியார் தேர்ச்சிபெற்றிருக்கிறார் களோ அவரவர்களைக் கொண்டு ஒவ்வொரு பெரிய சிவாலய விஷ்ணுவாலயங்களிலும் மற்றும்பல சிறந்த சபைகளிலும் சில நாழிகை நேரமாவது ஆலயங்கள் திருவுருவங்கள் அவற்றிற்குரிய வழிபாட்டு முறைகள் இவைகளை அவ்வவ் வழிபாடுகளில் ஈடுபடுவார் யாவர்க்கும் விளங்குமாறு, சொற் பொழிவாற்றுவித்தல் இருமொழி வேதங்களையும் பாராய ணம் செய்வித்தல் அவ்வத்தல வரலாறுகளுக் கேற்ற அலங் காரம் முதலானவைகளைச் செய்விதல் மற்றும் அவ்வச் சமயாசார சற்காரியங்களை யெல்லாம் புரிவித்தல் ஆக இவ் வளவும் முற்காலங்களில் வழக்கச் செயல்களாயிருந்து வந்தன. அவ்வழக்கம் இருந்ததினாற்றான் அவைகளைக் கேட்டும் கண்டும் வந்த மெய்த் தொண்டர்களெல்லாம் அவரவர் பத்திக்கும் சத்திக்கும் ஏற்ற அளவில் அவ்வால யங்களுக்கும் அவ்வாலய வழிபாடுகளுக்கும் இன்றியமை யாத் தேவைகளாயிருந்த பொருள்களையும் உபகருவிகளை யும் மேன் மேலுங் கொடுத்துத் தம்மாலியன்ற வழிபாடு

களையும் செய்து என்றும் பிறவாநிலையை எய்தினார்கள். அவர்களின் வழி வழி வந்தோராகிய நாமும் அவர்கள் செய்த அத்தவப்பயனால் அவமே தரும் பொய்ம்மதங் களிற் சாராமலும் இருமொழி வேதங்களையும் ஆகமங்களை யும் போதாரவாகக் கொண்டுள்ள வைதிகமார்க்களினின் றும் வழுவாமலும் கனநிலையிலும் வாலறிவன் நற்றாள் தொழும் பெரும்பேறு பெற்றுப் பழியஞ்சிப் பாத்தூணுண் போராய்ப் பேரின்பப் பெருவீடு அடைவதற் கேற்ற நன் னிலைபான வாழ்க்கைகளில் இருந்து வருகிறோம். சிவாலய விஷ்ணுவாலயங்களும் நம் தமிழ் நாட்டில் நாளுளும் பெரு கிப் பழுதில்லாமலும் பாதுகாப்புடனும் சுத்தமாகவும் அழகாகவும் திருவருட் பிரகாசத்துடனும் தம்மைக் கண்டு தொழுவார் தம்முள் வந்து வழிபடுவார் யாவரையும் உண்மைத் திருத்தொண்டர்களாக்குவிக்கும் இனிய தோற்றத்துடனும் மேன் மேலும் சிறந்து விளங்கி வந்தன. இனிமேலும் என்றென்றும் இந்நிலையிற் குறையாமல் வளர்ந்து விளங்குவதற்கான ஆழ்ந்தகன்ற வலிவான அடிப் படைகளைக் கொண்ட பொருட் பேறுகளுடன் விளங்கி வருகின்றன.

10

அக்காலங்களிலிருந்த தமிழ்ப்பெரு மக்களுக் கெல் லாம் அவ்வகையான பிரசாரங்களே போதுமானவையா யிருந்தன. அவற்றிற்கு மேலும் தேவையாயிருந்த வற் றைத் தேடிப்பெற வசதிகளில்லாதவர்களாயு மிருந்தார் கள். இக்காலத்தவர்களுக்கோ இப்போதுள்ள உலக நிலைமைக்கேற்றவாறு அப்பிரசாரத் துறைகளை வெவ்வேறு வகைகளில் விருத்தி செய்ய வேண்டியிருக்கிற படியால மேலே சொன்ன மிகப்பரந்த பல்வேறு துறைகளை யுடை யனவாயுள்ள அந் நூல்களிலும் சாசனங்களிலுமிருந்து அவ்

வக்கோயில்களின் சம்பந்தப்பட்ட அளவிலுள்ள வரலாறுகளை மாத்திரம் சுருக்கமாகவும் தெளிவாய் விளங்கக் கூடிய வகையிலும் சிறுசிறு நூல்களாய் எழுதி வெளியிடும்படி H. R. E. போர்டில் முன் முறையில் தருமபரிபாலனத் தலைவர்களாயிருந்தவர்கள் செய்வித்தார்கள்.

இத்தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு சிவாலய விஷ்ணுவாலயப் பொறுப்புக்களையும் திருத்தொண்டுகளையும் மேற்கொண்டுள்ள நிர்வாகத்தர்களும் திருப்பணியாளர்களுமாகிய நீங்களும் ஷி போர்டார் அவர்களின் உத்திரவுப்படியே தக்க பெரும் புலவர்களைக் கொண்டு அவைகளை யெல்லாம் எடுத்துத் திரட்டிச் சிறு நூல்களாக வெளியிட்டு வந்த தல்லாமல் அவ்வக்கோயில்களில் நிகழும் ஒவ்வொரு தனிவிழாப் பொதுவிழாவின்போதும் அவ்வவ்விழாக்களின் பெயர்கள் அவை நடத்தப்பெறுங்காலம் அவற்றைச் செய்விக்கும் தருமசிலர்களின் பெயர்கள் இவற்றை விளக்குமுகத்தால் அத்தலங்கள் இருக்கும் இடம் மார்க்கம் தூர அளவு ஆகியவைகளோடு அவ்வத்தல வரலாறுகளையும் சுருக்கமாக எழுதித் தனிப் பத்திரிகைகளோடு பொதுப் பத்திரிகைகளின் மூலமாகவும் விளம்பரப் படுத்தி வருகின்றீர்கள்.

இவை மாத்திர மின்றி இன்னும் முற்காலத்தவர்கள் கொண்டிருந்த வழக்கப்படியும் அவ்வக்கோயில்களின் பொருளாதார நிலைமை அவ்வத்தல வழிபாட்டன்பர்களின் தகுதிகள் இவைகளுக் கேற்றவாறு தனிநாட்களை விட இவ்வுற்சவ காலங்களில் அவ்வத்தல ஐதிகங்களுக்கு ஏற்றவாறு விசேட அபிஷேகம் அலங்காரங்களைச் செய்வித்தும் இருமொழிவேத பாராயணங்கள் இன்னிசை விருந்துகள் பரதநாடகக் காட்சிகள் ஆகியவைகளைப் புரிவித்தும் சிறந்த நற் சொற்பொழிவுகள் ஆற்றுவித்தும் தண்ணீர்ப் பந்தர்

களையும் அன்னசாலைகளையும் ஆக்குவித்தும் மேலும் பாடசாலை வேடிக்கை முதலானவைகளையும் ஏற்படுத்தியும் நம் தமிழ் நாட்டவர்களை யெல்லாம் கோயில்களுக்கு வரும் படிச் செய்து உற்சாகத்துடனும் மெய்ப் பத்தியுடனும் இவ் விறையுருவ வழிபாட்டுச் செயல்களைத் தாமே மேற் கொள்ளுமாறும், முன்னரே மேற் கொண்டுள்ளவர்கள் அவற்றை மேன் மேலுஞ் சிறப்புறச் செய்யுமாறும் தூண்டி வருகின்றீர்கள்.

11

இவ்வள வெல்லாம் செய்து வந்தும் ஆலயங்கள் அவற்றிலுள்ள திருவுருவங்கள் அவற்றின் வரலாறுகள் இவை எல்லாவற்றிற்கும் ஆதாரமாயுள்ளதும் அவற்றின் வழிபாடுகளை விருத்தி செய்வதற்காகச் செய்யப்படும் அகப்புறப் பிரசாரச் செயல்கள் எல்லாவற்றிற்கும் பெருந் துணையாயிருக்கத் தக்கதும் ஒரு முறை செய்யும் பொருட் செலவைக் கொண்டே மிகப்பல வருஷங்கள் வரையில் பற்பல நற்பலன்களைத் தரத்தக்கதும் ஆனது எதுவோ அது செய்யப் பெறாமலேயிருந்து வருகிறது.

அதாவது இத்தமிழ் நாட்டிலும் இதையடுத்திருக்கிற பிறபாஷை நாடுகளிலுமுள்ள திருக்கோயில்கள் அவ்வளவையும் ஒரே படத்திற் காட்ட முடியாதாயினும் அவற்றுட் பெரும்பாலான வற்றையாவது அது அது இருக்கும் இடங்கள் ஊர்கள் இவற்றையடுத்துள்ள மலைகள் ஆறுகள் கடற்றுறைகள் ரோடுகள் இருப்புப்பாதைகள் ஸ்டேஷன்கள் நிலப்பிரிவுகள் ஆகிய இவைகளோடும் மற்றும் அவை சம்பந்தமாய் அறியவேண்டியவைகளான பிறவற்றோடும் அதனதன் இயற்கையும் செயற்கையுமான இடவமைப்புக் களில் மாறாமல் யாரும் இருந்த விடத்திருந்தே ஒரேமுக

மாய்க் காணத்தக்க முறையில் தரைப்படம் எழுதிப் பதிப்பித்துத் தக்க விடத்தில் வைத்துப் பலரும் அறியும் படிச் செய்யாததுதான் பெருங் குறை. இக்குறை உங்கள் காலத்தில்தான் நிகழ்ந்தது என்பதல்ல. பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே குறையாகத்தான் இருந்து வருகிறது.

12

ஒவ்வொரு கோயிலிலும் இவ்வாறான தரைப் படங்கள் இருக்க வேண்டியது அவசியந்தான் என்பதைப் பலரும் அறிந்திருந்தும் இவ்வளவு காலம் வரையில் இக் குறை ஏன் நிறைவேறாமலிருந்தது? அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

இத்தகைய தமிழ் நாட்டுத் தரைப்படம் யாரேனும் ஒருவர் தம் சொந்தப் பொருட் செலவைக் கொண்டே செய்துமுடிக்கக் கூடுவதல்ல. இப்படத்திற் காட்ட விரும்புகிற அவ்வளவு ஊரார்களுமோ அன்றி வேறு பலரோ ஒன்று சேர்ந்து செய்து முடிக்கக் கூடுவது மல்ல. யார்க்கும் நேரேசென்று இடவாராய்ச்சி செய்யாமல் தரைப் படத்தைவரைந்து பதிப்பிக்கவோ இடச் சம்பந்தமுள்ள ஆராய்ச்சி நூல்களை எழுதி முற்றுவிக்கவோ முடியாது. நூலாராய்ச்சி செய்யாதவர் செய்யும் இடவராய்ச்சியும் பயன்றராது.

நூலாராய்ச்சி செய்வதற்கும் இடவாராய்ச்சி செய்வதற்கும் வேண்டிய வசதிகள் வெவ்வேறு வகைப்பட்டவை. அதனால் இவ்விரண்டு ஆராய்ச்சிகளையும் தாமே செய்து கொண்டு படக்குறிப்புக்களையும் தாமே வரைந்து வரத் தக்கவராய் ஒருவர் முன்வருவது அருமை. வந்தாலும் ஆராய்ச்சி செய்வாரதும் அவர்க்குப் பொருளுதவி செய்வார்களதுமான மனப்போக்கு செயல் பெரும்பிதம் ஆட்சி

பணிவு இவை வெவ்வேறு. இவ்வாராய்ச்சிகளின் முடிவு களோ ஓர் வரையறுப்பைக்கொண்ட காலம் இடம் பொருள் ஏவல் இவற்றுள் அடங்குவனவல்ல. மக்கட்டொகுதி யினர்க்குவரும் இன்பத்துறைகளும் துன்பத்துறைகளும் வெவ்வேறு வகைப்பட்டவை. இன்பத்துறைகளிற்றிளைத்து இறுமாந் திராவிட்டாலும் துன்பத்துறைகளிற்றுயருழந் தாழ்ந்தி எவ்வளவு கஷ்டங்களைத்தான் ஏற்பது என்று இடையிலே செயலைக் கைவிடுவாரதும் எவைவரினும் இதை முடித்தே தீர்வது என்று முற்றிலும் முயன்று முடிப்பாரது மான பழவினைகள் வெவ்வேறு. உதவிசெய்வாருள்ளும், எவ்வளவு காலம் எவ்வளவு தொகை வரையில்தான் உதவி செய்து கொண்டேவருவது என்று தாம் செய்வதாய்க் குறிப்பிட்ட உதவியையும் முற்றிலும் செய்யாமல் நட்டாற் றிற் கைவிடுவாரதும் எவைவரினும் காலமும் தொகையும் எவ்வளவானாலும் இப்படங்கள் உலகியனெறிகளுக்கே யன்றி முத்திநெறிக்கும் சாதனமாயிருப்பவை யாதலின் இவற்றிற்கு நம்மாலியன்றவரையில் உதவிசெய்வோமெனக் கொண்டு அவற்றை முற்றிலும் செய்து முடிப்பிப்பாரதும் ஆன, ஆள்வினைத்தன்மை பெரும்பொருள் வளர்ச்சி வள் ளன்மை பழவினை இவைகள் வெவ்வேறு வகைப்பட்டவை. இவற்றுள் ஒத்துவரவேண்டிய வற்றையெல்லாம் முற்றி லும் கூட்டிவைப்பதற்குத் திருவருட்டுணை வேண்டும். இவ் வளவும் கைகூடி வந்தால்தான் ஒருவர் இப்படங்களை எழுதி முற்றுவிக்கமுடியும். இவ்வளவும் கூடிவாராமையினா லேயே இத்தகைய படங்களை வரைந்து பதிப்பித்துதவ முன் வந்த பெரியார்களிற் சிலர் அவற்றை அரையும் குறையுமாய் நேர்ந்த வரையில் வரைந்து படமாகத் தந்தனர். மற்றுஞ் சிலர் தாந்தாம் நினைத்தவாறே முற்றுவிக்க முடியாமையால் அவற்றை அறவே நழுவ விட்டுவிட்டனர்.

அவ்வாறாயின், இம்மூன்று படங்களுந்தான் எவ்வாறு உருப்பெற்று நிறைவேறின? என்பிராயின் இங்கே காட்டிய எல்லாத் தடைமுடைகளுக்கும் எல்லாக் கஷ்டநஷ்டங்களுக்கும் ஈடுபட்டு, அவற்றிற்கு இடையிடையே இவை நிறைவேறுவதற்கு வேண்டியவைகளையெல்லாம் திருவருள் கூட்டிவைக்க கி. பி. 1910 இலிருந்து நண்பகல் முதலான எல்லாக் காலங்களிலும் பாலை முதலான எல்லா நிலங்களிலும் வேடர் வலைஞர் முதலான எல்லாச் சாதியாரதும் மகம்மதியர் கிறிஸ்தவர் முதலான எல்லா மதத்தாரதுமான துணைகளையும் சைவ வைணவக் கொடையாளிகளிற் பெரும்பாலாரது மனம் வாக்கு காயம் பொருள் இவற்றாலான உதவிகளையும் பெற்றுப் பெரும்பாலும் நடந்தே யாத்திரை செய்து, நாத்திகர்கள் முதல் சுத்தாத்துவித சைவசித்தாந்த பரமாசாரியர்கள் வரையிலுமுள்ள எல்லாக் கொள்கையாரோடும் பழகி, அவ்வத்தலத்திலும் பிறவிடங்களிலுமுள்ள முப்போதுந் திருமேனி தீண்டுவாராகிய ஆதி சைவர்களதும் பலவகைப்பட்ட நூலாராய்ச்சிகளையும் போதன முறைகளையும் மேற்கொண்டுள்ள செந்தமிழ்ப் புலவர்களதுமான ஆதரவுகளையேற்று அவ்வத்தல வியற்கையிடவமைப்புக்களைப் படமாக வரைவதற்கும் தக்க ஆதாரங்களோடுள்ள அவ்வத்தல வரலாறுகளை நூலாக எழுதுவதற்கும் வேண்டியிருந்தவைகளையெல்லாம் அவ்வப்போதே வரைந்தும் எழுதியும் வந்து, பொன்மலை S. I. R. தொழிற்சாலைப் பரோபகார வள்ளல் ஒருவரது தக்க உதவியால் முதலில் இடக் குறிப்புக்களையெல்லாம் இணைத்துத் திருத்தப் படமாக்கிக்கொண்டு, சுத்த சைவாதீனத் திருமடங்களில் ஒன்றான திருப்பனந்தாட் காசிமடத்திற் சில வருடங்கள் தங்கியிருந்து, முன் எழுதிவந்த அவ்வத்தல வாலாற்றுக் குறிப்

புக்களோடு தமிழ்வேதத் திருமுறைகளிலிருந்து ஒவ்வொரு தலத்தின் சம்பந்தமாகவும் அறியவேண்டியவற்றையும் ஆராய்ந்து தொகைப்படுத்திக்கொண்டு சென்னையில் வந்து தங்கி, ஒப்புயர்வற்ற ஆங்கில ஆட்சியின் பயனாகக் கிடைத்த சிறந்த சாதனங்களைக்கொண்டும், சித்திரக்கலையிற் றேர்ந்த பெரிய உத்தியோகத்தர்களின் தக்க உதவிகளைக்கொண்டும், இம்மூன்று படங்களையும் சுத்தமாய் எழுதித், தேவ கோட்டை முதலான நகரங்களிலுள்ள சந்திரகுல தனவைசி யப் பிரபுக்களிற் பலரும் பிறரும் முன் பணமாகத் தந்தவை யல்லாமல் அவர்களுள் மிக்க தாராள சிந்தையையுடைய முப்பெரு வள்ளல்களின் பெரும் பொருளுதவிகளால் நம் முடைய சென்னை கவர்ன்மெண்டு சர்வே ஆபீஸிலேயே 1939இல் சுத்தமாகவும் 4-நிறங்களோடும் பதிப்பிக்கப் பெற்றன என்றறிவீராக.

14

இவ்வாறெல்லாம் பலபட முயன்று எழுதிவந்து திருத் தப்படமாக்கிப் பதிப்பித்துப் பயன்றரு நிலையில் இருக்கின் றனவாயினும், இப்படங்களைக் கோயிற் பணங்களைச் செலவு செய்து வாங்கி ஒவ்வொரு கோயிலினும் வைப்பதனால், அக்கோயில்களுக்கோ அவ்வக்கோயில்களின் வழிபாட் டன்பர்களுக்கோ இதற்குமுன் கிடைத்திராதவைகளாய் என்னென்ன நற்பலன்கள் கிடைத்துவிடப்போகின்றன? என்பீராயின்? அவை மிகப்பல. அவற்றையெல்லாம் ஒரு வாறு சுருக்கிக் கூறவேண்டுமானால் இவ்வாறு கூறலாம்.

கோயில் எனப்படுவவெல்லாம், முத்திநெறிக்குச் சாதனமாயிருப்பது மாத்திரமன்றி மதப்பிரசாரத்தலங்க ளாகவும் இருப்பன. எல்லாம் வல்ல இறைவனது உருவ வழிபாட்டை மேற்கொள்வார் எவர்க்கும் அவரவர் விரும்

பும் வடிவங்களையெல்லாம் தம்மிடத்தே கொண்டிருந்து காட்டி, வழிபடச்செய்து, நற்கதிக்கு ஆளாக்குவன கோயில்களே. அவ்வாறே, காண்டற்குரியவையான இறையுருவ அலங்கார உபசாரங்கள், அவ்வத்தல வரலாறுகளை மெய்ப்பிக்கின்ற இயற்கை யடையாளங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், புகைப்படங்கள் ஆகியவைகளையும்; கேட்டற்குரியவையான இன்னிசை நாதங்கள், சமயாசார சீர்திருத்த சம்பாஷணைகள், இறையுருவ வரலாற்றுச் சொற்பொழிவுகள், சாத்திரபோதனைகள், மந்திரோபதேசங்கள், இறையுருவ வழிபாட்டுமுறைகள் ஆகிய இவைகளையும்; கற்றற்குரியவையான அவ்வத்தல வரலாற்று நூல்கள, சாத்திரங்கள், இருமொழி வேதங்கள், ஆகமங்கள், அவற்றை ஆதாரமாகக் கொண்ட நித்திய கர்ம அனுட்டான விதிகள், தமக்கும் பிறர்க்குமாகச் செய்யப்படும் பூசை முறைகள் இவைகளையும்; பழகுதற்குரியவர்களான பதிநூல்களைக்கற்று வெவ்வேறு திருப்பணிகளை மெய்ப்பத்தியோடு செய்து உண்மையானந்தப்பெருக்கிலே திளைக்கின்ற திருத்தொண்டர்களையும்; செய்தற்குரியவையான இறையுருவ வழிபாட்டிற்குரிய உத்தமோத்தம நற்பணிகள் பலவற்றையும் தம்மிடத்தே கொண்டிருந்து, இவற்றுள் எதையெதை யாரியார் விரும்பினும் அவற்றை அவ்வப்போதே கொடுத்து வருவனவும் அக்கோயில்களே. இவைகளையெல்லாம் நோக்க கோயில்களெல்லாம் மதப்பிரசாரத்தலங்களாகவுமே இருந்துவருகின்றன என்பது விளங்குகின்றதல்லவா? என்றுமழியாச் சிவப்பேறுபெற்ற மெய்யன்பர்களிற் பெரும்பாலோர் இவ்வாலய வழிபாட்டையே மேற்கொண்டிருந்தார்கள். சிவபெருமானும் அவர்களுக்கெல்லாம் பெரும்பாலும் அக் கோயில்களிலிருந்தே காட்சி யளித்தும் வரங்கள் தந்தும் ஆட்கொண்டு வீட்டுப்பேறளித்

துள்ளார். தமிழ்வேத ஆசிரியர்களும், மற்றும் பல மெய்த்தொண்டர்களும், "தாமின்புறுவ துலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்றபடி தாந்தாம் பெற்ற சிவானந்தானுபவங்களை யெல்லாம் யாவரும் அனுபவிக்கவேண்டும் என்று உலகத்துள்ள பக்குவப்பட்ட அன்பர்களையெல்லாம் "அடியவர்க்கு மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே" எனவும், இன்னும் இவை போன்ற பாடல்களையும் அக் கோயில்களிலிருந்தே பாடி அக் கோயில்களுக்கே அழைத்துள்ளார்கள். இவ்வாறே விஷ்ணுவாலயங்கள் முதலான மற்றத் தேவாலயங்களும், பிரசாரத்தலங்களாகவும் முத்திநெறிக்குச் சாதனமாகவுமேயிருந்தன வென்பது, அவைகளைப் பாடியுள்ள ஆழ்வார்கள் முதலானவர்களின் பாடல்களைக் கொண்டும் அவர்களின் சரித்திரங்களைக்கொண்டும் அறியப்படுகின்றது. அக்கோயில்களைப் பாடியவர்கள் யாவரும் தந்தம் பாடல்களில் அன்பர்கள் யாவரும் அவற்றிற்கு வரவேண்டும் என்ற நோக்கத்துடனே அது அது இருக்கும் இடம் திசை எல்லை ஆகியவைகளை விளக்கிப் பாடியிருக்கின்றனர். நீங்களும், அவைகளையெல்லாம் ஆதாரமாகக் கொண்டே மேற்சொன்ன பிரசாரச் செயல்களையெல்லாம் செய்து, இறையுருவ வழிபாட்டன்பர்களையெல்லாம் திருக்கோயில்களுக்கு அழைக்கின்றீர்கள். இவைகளெல்லாம் எந்தக் கோயிலும் முத்திநெறிக்குச் சாதனமாயிருப்பது மாத்திரமன்றிக் கோயில்வழிபாட்டுப் பிரசாரத்தலமாகவும் இருந்து வருகின்றது என்பதை மெய்ப்பிக்கின்றதல்லவா?

15

இவ் வுலகத்துள்ளவற்றில் எந்த ஊர் அல்லது தலத்தின் இடம் திசை எல்லை மார்க்கம் ஆகியவைகளை எவர்

விளக்கிக்காட்ட விரும்பினலும் அதற்குத் தரைப்படங்கள் தான் ஏற்றவையாகுமே யொழிய வேறு எதுவுமே தக்க உதவியாகாதென்பது யாவரும் அனுபவித்தறிந்த உண்மை. ஆகவே, தரைப்படங்களோடு சேர்த்துச் செய்யாத கோயிற் பிரசாரங்கள் எவ்வளவு விரிவுடையதாயும் பொருட்செல வுடையதாயுமிருந்தாலும் அவையே இக்காலத்தவர்களுக் கும் போதுமானவையென்று எண்ணிவிட முடியாது. போதாமையினுற்றான் உயர்ந்த நூலாசிரியர்கள் சிறந்த உரையாசிரியர்கள் பரந்த ஆராய்ச்சியாளர்கள் எனப்படுவோ ருள்ளும் பலர் பற்பல தலங்களின் இடம் திசை எல்லை ஆகியவைகளை ஒன்றை மற்றொன்ருக மயங்கிக் கூறியும் எழுதியும் வருவாராயினர். திருஎரகம் திருப்பெருந்துறை திருப்புக்கொளியூர் அவிநாசி என்பனபோன்ற மிகப் பெரும் பாலரால் நன்கறியப்பட்டனவான தலங்களின் இயற்கை யமைப்புக்களும் அவர்கள் மயக்கங்களுக்கு விஷயங்க ளாயின. தமிழ் வேதப்பாடல்கள் மங்களசாசனப்பாடல் கள் இவற்றைப் பெற்றவும் பெருதனவுமான சிவ விஷ்ணுத் தலங்களுக்கெல்லாம் அதனதன் இடம் திசை எல்லை மார்க்கம் ஆகியவைகளை விளக்குவதற்கென்றே எழுதப்பட் டுள்ள தலயாத்திரை நூல்களுள்ளும் பற்பலதலங்களின் இடம் திசை முதலானவைகள் மாறுபடக் கூறப்பட்டிருக் கின்றன. இன்னும், அனேக தலங்களின் இடம் முதலானவைகளைப் பலர் அறிய முடியாமலேயிருக் கின்றனர். மற்றும் பல தலங்கள் பல நூற்றுண்டுகளுக்கு முன்னிருந்தே பற்பல பெருஞ் சிறப்புக்களைப் பெற்று வந்தனவாயிருந்தும் அவை அத்தலங்களைச் சூழவிருந்து வசிப்பவர்களாலேயே அறிய முடியாதனவாயிருக்கின்றன.

மிகுந்த பொருட்செலவு செய்து, தலயாத்திரை, பிரார்த்தனை பரிகாரம், உத்தியோகம், வியாபாரம், பல

பொருட்காட்சி, நற்பொழுது போக்கல், ஐவகை நிலங்களின் இயற்கைவளங்காணல், சுற்றம்காணல், என்பன போன்ற வெவ்வேறு காரணங்களை முன்னிட்டு யாத்திரை செய்யத் தலைப்படுகின்றவர்களிற் பெரும்பாலோர், தாங்கள் குறிக்கொண்டு செல்லும் தலங்கள் அல்லது ஊர்களுக்குச் சென்றுவருவதோடு அங்ஙனம் வருங்காலத்தில் மிகப் பெரும்பாலார்க்குத் தெரிந்தவையான காஞ்சிபுரம் திருக்கழு(கு)க் குன்றம் சிதம்பரம் திருஇடைமருதூர் திருப்பனந்தாள் ஆவுடையார் (ஆளுடையார்) கோயில் மதுரை இராமேச்சுரம் இவைகளைப் போன்ற தலங்களை மாத்திரம் பார்த்து வழிபாடு செய்துகொண்டு தங்கள் ஊர்களுக்கு வந்துவிட்டபின் தாம்தாம் சென்றுவந்த அத் தலங்களுக்குள்ளேயே இருப்பனவும் அவை ஒவ்வொன்றுக்கும் மிகச் சமீபத்திலும் பக்கங்களிலும் வழிகளிலுமாகவே யிருப்பனவும் வெவ்வேறு வகைகளிற் பெருஞ் சிறப்புப் பெற்றிருப்பனவுமான கயிலாயநாதர்கோயில் மகாபலிபுரம் (மாமல்லபுரம்) திரிபுவனம் கங்கைகொண்டசோளேச்சுரம் திருப்புனவாயில் திருஏடகம் திருஉத்தரகோசமங்கை இவைகளையும் இவைபோன்ற தலங்களையும் மற்றும் அவரவர் தகுதிகளுக்கும் நிலைமைகளுக்கும் ஏற்ற வருவாய்களைப் பெருக்கிக்கொள்வதற்குத் தகுதியான பொருள்களையுடைய பல ஊர்களையும் பாராமலே வந்துவிட்டதையறிந்து அதிக ஏமாற்றத்தையும் மனக்கவலையையும் அடைகின்றனர்.

நடந்தும் வண்டிகளிலும் மோட்டார் முதலான யந்திர வாகனங்களிலும் யாத்திரை செய்கின்றவர்களும், தாங்கள் குறிப்பிட்டுச் செல்கின்ற ஊர்களுக்கு நேரானவும் நன்மையானவும் சமீபமானவுமான வழிகளிருப்பவும் அவற்றை யறியாமல் சுற்றுவழிகளிற்சென்றும், ஆறு முதலானவைகளிற் குறுக்கிட்டும், காட்டிடையிலும் மலையிடுக்கு

களிலும் சிக்கியும், மற்றும் பலவகையான கஷ்டங்களேயும் நஷ்டங்களேயும் அடைந்துவருகின்றார்கள்.

இன்னும், புகைவண்டிகளிலோ அன்றி மற்றவாகனங்களிலோ யாத்திரை செய்கின்றவர்களுள்ளும், அவரவர் ஏறும்போது எந்தத் திசையைநோக்கி ஏறுகின்றார்களோ அந்தத் திசையிலிருந்தே இறங்குவதாக இறங்கும்போது எண்ணிக்கொண்டு, அவ்வூருக்குச்சென்றபின் சூரியனே வேறு திசையில் உதித்திருப்பதாகவும் மயங்கித் தாந்தாம் பார்க்க விரும்பிய இடங்கள் அல்லது தலங்களேப் பாராமலே திரும்பி வருவோராயும், பார்த்ததையும் திசைமாற்றி மனத்திற் பதியவைத்துக்கொண்டு வருவோராயும், தாம் கொள்வதன்றி மற்றவர்க்கும் தங்கொள்கைகளேயே மெய்ப்பிக்க முயல்வோராயும் பற்பலராகின்றனர். ஒரு தலம் அல்லது ஊருக்கு இயல்பாயமைந்துள்ள சிறப்புக்களே அதனதன் நில விவரம் புலனுகாமையால் அப்பெயரையே பெற்றுள்ள வேறு தலம் அல்லது ஊருக்குச் சார்த்திக்கூறவும் சிலர் துணிகின்றனர்.

சிற்சில நூலாசிரியர்களும் எழுத்தாளர்களும் பிறரும் இவ்வாறு மயங்கிவிடுவதிஞலேயே அத்தலங்களுமா தந்தம் நிலேயினின்று மாறிவிடப்போகின்றன? என்று யாரும் எண்ணிவிடுவதற்கில்லே. ஏனெனின், அவர்கள் மயக்கத்தால் வரும் கேடுகள் அளவிலாதன. அங்ஙனம் எழுதுமவரெல்லாம் 'ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன்றாம் புலவர்' என்றபடி அவ்வத் தொகையினரால் மதிக்கப்பெறுமவர்களாகவே யிருப்பதோடு வேறு பல சிறப்புக்களேயும் உடையவர்களாயிருக்கின்றனர். ஆதலால், அவர்களில் ஒவ்வொருவர் சொல்லேயேநம்பும் ஒவ்வொரு தொகையினரும் தம்முள் மாறுபட்டுப் பலவகையான இடர்ப்பாடுகளேயடையவேண்டியவர்களாகின்றார்கள். யாரும் இவ்வகையான இடர்ப்பாடுகளேயடையாமல் உண்மை நிலேகளே உணர்ந்துகொள்ள

வேண்டும் என்பதற்காகத்தானே நம் முன்னோர்களும் நாமும் அவ்வத்தலப் பாடல்கள் நூல்கள் பத்திரிகைகள் ஆகியவற்றில் அவ்வத்தல வரலாறுகளோடு அதனதன் இடவிவரங்களையும் சேர்த்துப் பாடியும் எழுதியும் வருகின்றோம்? ஒவ்வொரு கோயிலாரும் அததற்குள்ள இடவிவரங்களைத் தனித்தனியே எழுத்தால் எழுதி வெளியிடுவதைவிட, எல்லாக் கோயில்களின் இடங்களையும் அதனதன் இயற்கையும் செயற்கையுமான அமைப்புக்களோடு ஒரே முகமாய்க் காட்டக்கூடிய தரைப்படங்களை ஒவ்வொரு கோயிலிலும் வைத்திருந்தால் அவற்றைப் பார்க்கத்தக்க அவர்கள் அவ்வாறு மயங்கி எழுதியிருக்கமாட்டார்கள். எழுதினும் அவ் வத்தொகையினரும் இப்படங்களையும்பார்ப்பார்களாதலால் அவர்கள் மாற்றி எழுதியதைக்கொண்டு மயங்கிவிடமாட்டார்கள். ஆகவே ஒவ்வொரு கோயிலிலும் இப்படங்களை வைத்துப் பயன் படுத்துவதுதான் உங்களாற் செய்யப்படும் கோயிற் பிரசாரத்துறைகள் எல்லாவற்றையும்விடச் சிறந்தமுறை யாகும் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

16

உலகத்தில் நடைபெற்று வருகின்ற பொறுப்புள்ள எந்தத் தொழிலும் அததற்கேற்ற படப்பிரசாரங்களாலேயே மேன்மை யடைகின்றன வென்பது யாவரும் அறிந்த உண்மை. இக்காலத்தில் இவ்வுலகத்துள்ள அரசியலெல்லாவற்றினும் சிறந்தது ஆங்கில ஆட்சி. அதுவே, அவ்வரசாட்சிக் குட்பட்ட அவ்வளவு இடங்களையும் சரியான முறையில் அளந்து தரைப்படங்களாக எழுதிப் பதிப்பித்து, அவற்றைப் பலரும் அறியும்படிச் செய்து அப்படங்களின் மூலமாகவே நீதி நிர்வாகம்

இவற்றை நடத்தி மேன்மையடைந்து வருகின்றது. அதற்கு உள்ளும் புறம்புமாயுள்ள மற்ற சிறந்த அரசாங்கங்களும் அவ்வாறே மேன்மையடைகின்றன.

உலகத்திலுள்ள வியாபாரத்தலங்கள் எல்லாவற்றிலும் சிறந்தவையான ரெயில்வே கம்பெனிகளும் அதற்குச் சொந்தமான இடங்கள் ரோடுகளையெல்லாம் சரியான அளவுடனே அளந்தெழுதிப் படமாகப் பதிப்பித்து, அவற்றை அவற்றின் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் பலரும் பார்க்கும்படி வைப்பது மாத்திரமன்றி விரும்பும் பிரயாணிகள் யாவர்க்கும் மிகக் குறைந்த விலைக்குக் கொடுத்தும் தம் வியாபாரத் தொழிலை மேன்மையடையச் செய்கின்றன.

கல்விச் சாலைகளிலும், வானசாத்திரம் பூமி சாத்திரம் உள்நாடு பிறநாடுகளின் இயற்கையமைப்புகள் ஆகியவைகளும் பிறவும் படங்களின் மூலமாகவே போதிக்கப்படுகின்றன.

இவ்வுலக வாழ்க்கைகளுக்குத் தேவையான இத்தொழில்களுக்கே இப்படப் பிரசாரங்கள் இவ்வளவு அவசியமா யிருக்கையில், இம்மை மறுமை இரண்டு வாழ்க்கைகளுக்கும் இன்றியமையாதவையான இத்திருக்கோயிற் பணிகளுக்கு இவ்வகையான படப்பிரசாரங்கள் எவ்வளவு அவசியம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அவைகளெல்லாம் அவ்வாறு படப்பிரசாரங்களை நடத்தியே மேன்மையடைந்து வருவதை அறிந்திருந்தும், நம்முடைய தமிழ் நாட்டிலுள்ளவும் மிகப் பழமையானவும் அரசர் முதலான யாவரும் தந்தம் உயிரினும் சிறந்ததாகக் கொண்டு போற்றப்பட்டனவும் உலகமெங்கும் புகழப்பெறுகின்றனவுமான திருக்கோயில்களின் வரலாறுகளையோ சைவ சமயாசாரியர்கள், சித்தாந்த சாத்திராசிரியர்

கள், அவற்றின் உரையாசிரியர்கள், மற்றும்பல சிறந்த சைவநூலாசிரியர்கள், இவர்களுடையவும்; இவர்களைப் போன்ற பிறமதத்தவர்களுடையவுமான தமிழ்ச் சரித்திரங்களையோ அறிவதற்காவது, அறிந்து பிரசாரம் செய்வதற்காவது, தகுதியான தமிழ்நாட்டுத் தமிழ்த் தரைப்படங்களை இதுவரையில் ஒருவருமே எழுதிப் பதிப்பியாதிருந்துவிட்டபடியால், அவற்றையும் அவைபோன்ற பிறவற்றையும் விளக்கக்கூடிய இப்படங்களை இவ்வாறெல்லாம் பலபட முயன்று எழுதிப் பதிப்பித்துக் குறைந்த விலைக்கே கொடுத்து வருகின்றேன்.

17

இதுவரையில் எழுதப்பட்ட அவ்வளவையும் முன்னரே நன்குணர்ந்தவர்களாகையால் இப்பொழுது சென்னையிலுள்ள இந்துமத தர்மபரிபாலன சபையின் தலைமைப் பதவியிலமர்ந்து அத்தருமங்களையெல்லாம் நடுநிலைமாறாமல் பரிபாலித்து வருகின்றவர்களாகிய மிகமேன்மைதங்கிய கனம் ராவ்பகதூர். டி. எம். சின்னையா பிள்ளை. எம்.ஏ. பி.எல் அவர்கள் தமிழ் ஜில்லாக்களிலுள்ள திருக்கோயில்களின் ட்ரஸ்டிகளுக்கெல்லாம் இப்படங்களை வாங்கி அக்கோயில்களில் வைத்துப் பயன் படுத்தும்படி சிபார்ஸு செய்து, சிறந்தவோர் சர்க்குலரைப் பிறப்பித்துள்ளார்கள்.

18

அவர்கள் ஆபீஸிலிருந்து கோயில்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டு வருகிற அவ்வருள் நிறைந்த சர்க்குலரின் நகலை இவ்விளம்பரத்தின் முகப்பில் பதிப்பித்திருக்கிறேன்.

19

இந்த சர்க்குலர் வரப்பெற்ற தேவஸ்தான (நிர்வாகத்தர்கள்) ட்ரஸ்டிகளெல்லாம் அதனைப் பெரிதும் ஆதரித்துத்

எனக்குத் தேவைக்கடிதங்கள் எழுதி வரவழைத்தும் நேரிற் பெற்றும் தங்கள் கோயில்களில் சிறப்புறவைத்துப் பயன் படுத்தி வருகின்றார்கள்.

தருமபுர ஆதீனத்தில் மெய்கண்ட சந்தானத் திருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருமரபில் வந்த ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தங்கள் ஆதீனத்துப் பொறுப்பிலுள்ள திரு ஐயாறு திருப்பனந்தாள் திருப்புள்ளிருக்கு வேளூர் (வைத்தீஸ்வரர் கோயில்) முதலானதலங்களிலும் தேவகோட்டை முதலான நகரங்களிலுள்ள தனவைசியர்கள் முதலான பேரறிவாளர்கள் தந்தம் வீடுகளிலுள்ள அலங்கார மண்டபம் பூசையறை ஆராய்ச்சி நிலையம் இவை முதலான இடங்களிலும் வழிபாட்டன்பர்களும் நண்பர்களும் பார்க்கக் கூடிய இடங்களில் எவ்வளவு அருமையான வேலைப்பாடுகளுடன் இப் படங்கள் பொருத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. என்பதையும் அக் கோயில்களில் வழிபட வருகின்றவர்களும் அவர்கள் வீடுகளில் பல நற்காரியங்களை முன்னிட்டு வருகின்றவர்களும் இப்படங்களைப் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சியுடன் பயன்பெற்று வருகின்றார்கள் என்பதையும் பல அன்பர்களால் புகழ்ந்தெழுதப்பட்டு என் விலாசத்துக்கு வருகின்ற வாழ்த்துக் கடிதங்களும் படத்தேவைக் கடிதங்களும் விளக்குகின்றன. அவ்வமைப்புக்களை நானும் நேரிற்கண்டு மகிழ்ந்திருக்கின்றேன். நீங்களும் அவ்வமைப்புக்களை நேரிற்கண்டோ அல்லது கேட்டோ மகிழ்ந்திருப்பீர்களென்று நம்புகிறேன்.

அவர்களைப்போலவே நீங்களும் இப்படங்களை வாங்கி உங்கள் கோயில்களிலும் வீடுகளிலும் பலரும் பார்க்கக் கூடிய இடங்களில் தக்க பாதுகாப்புடன் வைத்து உங்கள்

கோயில்களோடு வீடுகளையும் அங்கே வந்து வழிபடும் அன்பர்களையும உயர்நிலைக்குக் கொண்டுவரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

21

இங்கே இப்படங்களுக்கு எதிர்பாராததாய் வாய்த்த பெருஞ் சிறப்பொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்படங்கள் மூன்றையும் சென்னை கவர்ன்மெண்டு சர்வே ஆபீஸார் 1939இல் தங்கள் ஆபீஸ் படங்களைப் போலவே சுத்தமாய்ப் பதிப்பித்துத் தந்தார்கள். பினனர், சென்னை மாகாண கவர்ன்மெண்டார் உலக மகாயுத்தம் காரணமாக இப்படங்களுக்கும் தடை விதித்துவிட்டார் கள். அத்தடை விதிக்கபபட்டிருந்த காலம் முழுவதிலும் சர்வே ஆபீஸார் இப் படங்களையும் வரவைத்துத் தங்கள் ஆபீஸ் படங்களோ டொப்பத் தக்க பாதுகாப்புடன் வைத்தி ருந்து அத்தடை நீங்கியவுடன் என்னை நேரில் வரவழைத்து ஒப்படைத்துவிட்டார்கள். இந் நிகழ்ச்சிகளிலிருந்து இம் மூன்று படங்களிலும் அரசியலார்க்கு வேண்டியவைகளும் காட்டப்பட்டிருக்கின்றன என்பதும், அவையாவும் சரி யான அளவுடனே காட்டப்பட்டிருக்கின்றன என்பதும், அவ்வளவும் சுத்தமாகவே பதிக்கப்பட்டிருக்கின்றன என் பதும் விளங்குகின்றதல்லவா? இவர்கள் செய்த இப் பெரிய உதவிக்கு நான் என்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

22

தமிழ்நாட்டிலுள்ள கல்விச்சாலைகளின் உரிமையாளர் களே! நிர்வாகத்தர்களே! மேலதிகாரிகளே! போதகாசிரியர் களே!

நீங்கள் முற்பிறப்புக்கள் பலவற்றில் முயன்று செய்த நல்வினைகளின் பயனாகவும் விரும்பிக் கற்ற பெருங்கல்வியின் தொடர்பாகவும் ஈண்டு இக் கல்விச்சாலைகளின் பொருட் பொறுப்புக்களையும் ஆசிரியத்தன்மைகளையும் மேற்கொண்டு நம் தமிழ்நாட்டின் வருங்காலப் பெருந்தோன்றல்களாயுள்ள தமிழ் மாணவர்களுக்கெல்லாம் இயல் இசை நாடகம் என்னும் முப்பகுதிகளைக் கொண்ட செந்தமிழின் இலக்கணங்களையும் மற்றும் கணித நூல்கள் மருத்து நூல்கள் வான சாத்திரம் பூதசாத்திரம் பூமிசாத்திரம் வேளாண்மை வியாபாரம் உத்தியோகம் சித்திரப் பயிற்சி உடற்பயிற்சி ஆகியவைகளையும் பிறவற்றையும் போதித்து மேல்நாட்டு மாணவர்களோடொப்ப இம் மாணவர்களையும் நன்னிலையில் முன்னேறக் கொண்டுவருகின்றீர்கள்.

என்றாலும் அவற்றையெல்லாம் போதிப்பதற்காக வேண்டப்படும் பொருள்களில் இன்றியமையாதவையான சில கருவிகள் இல்லாமல் குறையாகவே இருந்துவருகின்றன. அவை தமிழ்நாட்டுத் தரைப்படங்களும் இப்பட விளக்கமாகிற நூலும் என இவையே. இவை தாம் தொகையளவிற் சிலவேயாயினும் உங்கள் போதனா முறைகளுக்கு மிக்க பயன்றருவனவாயமைந்திருக்கின்றன.

எந்த நாடும் அதன்கட்டோன்றுகின்ற மேன்மக்களின் வரலாறுகளுக்கேற்பவே மேன்மையடைந்து வருதல் இயற்கை. வரலாறு என்று சொல்லப் பெறுவனவெல்லாம் அது அது நிகழ்ந்த இடம் இயற்கையமைப்பு திசை எல்லை ஆகிய உண்மை நிலைகளைக்கொண்டே மெய்ப்பிக்கப்படுவன. நம் தமிழ் நாடானது இம்மை மறுமை இரண்டையும் கருதி மக்களாற் செய்யப்படும் செய்கைத் துறைகள் ஒவ்

வொன்றாலும் மற்றெப்பாஷை நாடுகளையும்விடப் படைப்புக்காலந்தொட்டே மேன்மையடைந்து வந்திருக்கிறது. அதனால் தமிழராயுள்ளார் யாவரும் இவர்களுள்ளும் தமிழ் நூலாசிரியர்கள் உரையாசிரியர்கள் ஆராய்ச்சிப் புலவர்கள் கல்விச்சாலைகளின் நிர்வாகத்தர்கள் மேற்பார்வையாளர்கள் போதனாசிரியர்கள் ஆகிய நீங்கள் தமிழ் மாணவர்களை யெல்லாம் நம் தமிழ்நாட்டின் சம்பந்தமாய் நன்றாய் அறிந்திருக்கும்படிச் செய்யவேண்டியவை மிகப்பல அவற்றுள்,

23

தமிழ்நாட்டின் புற எல்லைகள் எவை? தமிழ் வேந்தர்களின் ஆட்சிக் காலங்களில் எந்தெந்த நிலப்பிரிவுகளும் நகரங்களும் இராஜதானிகளாகவும் துறைமுகங்களாகவும் பிறவாகவும் தனிச் சிறப்புப் பெற்றிருந்தன? அவற்றுள் மிகப் பெரும்புகழ் வாய்ந்தவைகளும் மிகப் பழமையானவுமான தென் மதுரை கபாடபுரம் மணலூர் என்னுந் தலைநகரங்களும், அவற்றைச் சார்ந்திருந்த பஃறுளியாறு முதலான ஆறுகளும், பேராற்று நெடுந்துறை தனியூர் முதலான பற்பல ஊர்களும், மணிமலை முதலான பலமலைகளும் எங்கெங்கே யிருந்தன? அவை தாம் கடலாற் கொள்ளப்பட்டன வென்றாலும் இப்போதும் இருப்பன வற்றுள்ளும் பூம்புகார் வஞ்சிநகரம் கொற்கை கிடங்கில் வேலூர் எயிற்பட்டினம் செங்கண்மா, மாமல்லபுரம் (மகாபலிபுரம்) சோழமாளிகை, பல்லவநகரம் தகடூர் ஆமகலூர் இவை போன்ற இராஜதானிகளும், இவற்றின் சார்வாயிருந்த பல தலை நகரங்களும் எங்கெங்கே என்னென்ன நிலைமைகளில் இருக்கின்றன? எந்தெந்த ஆறுகள் அக்காலங்களில் அவரவர் நாடுகளுக்கும் மொழிநிலங்களுக்கும் எல்லைகளாகவும் அந்நாடுகளின் செல்வப்பொருள்களை வளர்ப்பனவாகவும்

இருந்தன? அவற்றின் தோற்றம் முடிவுகளும் இடைவழி களும் எவ்வெவ்வாறிருந்தன? அவற்றுள் குமரியாறு பாலாறு பம்பாநதி கெடிலநதி இவைபோன்றவை இக் காலத்தில் என்னென்ன பெயர்களைப் பெற்று எவ்வெவ்வா றோடுகின்றன? எந்தெந்த மலைகள் அவ்வந் நாடுகளின் எல்லைகளாகவும் அந்நாடுகளின் வளங்களுக்கெல்லாம் கரு வூலங்களாகவும் பிறவாகவும் விளங்கின? இன்னும், புலவர் களுக்கென்றால் உயிரையும் தரவல்ல வள்ளல்கள சாவவும் பிழைக்கவும் பாடவல்ல புலவர்கள், அரிய பெரிய இலக் கண நூலாசிரியர்கள், சரித்திர நூலாசிரியர்கள், அரிய நீதி நூலாசிரியர்கள், தர்க்க சாத்திரங்கள் சோதிட சாத்திரங் கள் வைத்திய நூல்கள் இசை நாடக நூல்கள் இவற்றின் ஆசிரியர்கள், பரணி மடல் இவைபோன்ற வெவ்வேறு பிர பந்தாசிரியர்கள், அரிய பெரிய காப்பியங்களுக்கும் மற்று முள்ள பழையவும் புதியவுமான தமிழ் நூல்களுக்கும் உரைகளையும் ஆராய்ச்சிகளையும் எழுதி அவற்றின் மூல மாய்க் காணக்கிடைக்காதனவும் கேட்கக் கேட்க நெஞ்சை உருக்குவனவுமான பண்டைக்காலத் தமிழ் நூல்களின் பெயர்கள் அவற்றின் சிற்சில பகுதிகள் அக்காலத்திய தமிழ் நாட்டவர்களின் கடவுள் வழிபாட்டு முறைகள் வழக்க ஒழுக்கங்கள் சரித்திரங்கள் ஆகியவை விளங்கும்படி எழுதி யும் பதிப்பித்தும் அருந்தமிழ்ச் செம்பொருட் புதையல்க ளாய் நமக்கு வைத்துச்சென்ற பழையரும் புதியருமான உரையாசிரியர்கள், பதிப்பாசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், எட்டுத் திசைகளில் மாத்திரமன்றி வானுலகினும் சென்று வெற்றிக்கொடி நாட்டிய முடிமன்னர்கள், சிற்றரசர்கள், மதிமந்திரிகள், சேனாதிபதிகள், முடிமன்னர்களையும் எதிர்க்க வல்ல சுத்தவீரர்கள், கனலினும் மூழ்கியெழவல்ல கற்பரசிகள், ஒருகாற் சொன்ன சொல்லைக்காக்க ஒரே

காலத்தில் உயிரையுந் தந்த எழுபது பேர்கள், எட்டுத் திசைகளிலும் கப்பலோட்டிச் சென்று நவமணிகளையும் கூலப்பொருள்களையும் வியாபாரம் செய்துவந்த வாணி பர்கள், மற்றும் இவர்களைப் போன்றவர்களும்; எல் லாம் வல்ல இறைவனே நேரில்வந்து அவைத்தலைவராகவும் தமிழ்ப் புலவராகவும் வீற்றிருக்கவும் நூல்களை மதிக்கவும் பெற்ற தமிழ்ப் புலவர்கள், அவ்விறைவனே வந்து தம் திரு வடிப் பேற்றிற்குரியராயினமை காட்டி நேரே ஆட்கொள் ளப்பெற்ற திருத்தொண்டர்கள், இம்மை மறுமை இரண் டிற்கும் உற்ற துணையாயிருக்கிற அருட்பாடல்களைப் பாடி யருளிய தமிழ்வேத ஆசிரியர்கள், பொய்கண்டார் காணுப் புனிதமெனும் அத்துவித மெய்கண்டார் முதலான சைவ சித்தாந்த சாத்திராசிரியர்கள், இவற்றின் கிளைச்சாத்திராசி ரியர்கள், மங்களசாசனப் பாடலாசிரியர்கள் வடகலை தென் கலை குருபரம்பரை ஆசிரியர்கள், மற்றுமுள்ள சங்காரச் சாரிய சுவாமிகள் முதலான அவ்வவ்வைதிக மதாசாரியர் கள், அவரவர்களின் மரபில்வந்த பரம்பரை ஆசிரியர்கள், அப் பாடல்களுக்கும் சாத்திரங்களுக்கும் உரை வியாக்கியா னம் பாஷியம் மொழிபெயர்ப்பு இவற்றை எழுதிச் சிறப் புற்ற உரையாசிரியர்கள், ஆகிய இத்திறத்தவர்க ளெல்லா ரும் அவதரிக்கப்பெற்றனவும் இவர்களுடைய அதியற்புதச் சரித்திரங்கள் நிகழப் பெற்றனவுமான ஊர்களும் தலங் களும் மிகமுக்கியமாய் அறியத்தக்கவை. இவற்றுள் எந்த நூற்சரித்திரத்தலமும் விலக்கானதல்ல. ஒவ்வொரு வகை யைச் சேர்ந்த வற்றுள்ளும் அத்தந்த நூற்பிரியர்களால் அவையவை விரும்பப் படுவனவாகவே யிருக்கின்றன. பெரும்பாலான இடங்களின் ஆராய்ச்சிகள் தமிழ்ப் பெரும் புலவர்கள் முதல் பயிற்சியாளர்கள் வரையில் பெரும்பாலா ரது திருவுள்ளங்களையும் நல்லறிவுகளையும் பெரிதும் கலக்கி

யும் கவர்ந்தும் வந்திருக்கின்றன. இவ்வளவையும் உடைமை யாலன்றோ தமிழ்ப் புலவர்கள் மாத்திரமன்றி ஆங்கில ஆசிரியர்கள் முதல் பிறநாட்டறிஞர்கள் பலரும் இத் தமிழ் நாடே மற்றெப்பாஷை நாடுகளையும்விட மொழிப்பழமையாலும் சரித்திரப் பழமையாலும் மற்ற வகைகளாலும் மிக மேலானது என்று போற்றியும் எழுதியும் வருகின்றார்கள்?

24

இவர்களுடைய சரித்திரங்களெல்லாம் படைப்புக்காலந்தொட்டே நிகழ்ந்து வந்திருக்கிறபடியால் எதிர்பாராதனவும் தடுக்க முடியாதனவுமாய் இடையிடையே நேர்ந்த கடல்கோள் முதலான பல இழிபாடுகளால் அவ்வக்காலத் தறிஞர்களால் எழுதப்பட்டு வந்திருந்த நூல்களிலும் சாசனங்களிலும் பெரும்பாலானவை யிறந்தும் மறைந்தும் போயின. இருந்தவற்றுள்ளும் பல முன்னும் பின்னும் மறைந்தவையாயும் சிற்சில பகுதிகள் அல்லது பாடல்கள் தவிர மற்றவையெல்லாம் மறைந்தவையாயும் இப்போது இருக்கின்றன. அவ்வக் நூற்றலைவர்களின் சரித்திரங்கள் நிகழ்ந்த இடங்களுள்ளும் பற்பல நிலப் பிரிவுகள் மறைந்து போயின. இருப்பவற்றுள்ளும், பற்பல இடங்களும் ஊர்களும் உருமாற்றம் இடமாற்றம் பெயர்மாற்றம் குடி மாற்றம் இவைகளை அடைந்திருக்கின்றன. என்றாலும், பிற்காலத்திய பெரும்புலவர்கள், தொகுப்பாசிரியர்கள் இவர்களாலும், மற்றும் அரசர்கள் முதலானோராலும், எழுதியும் சேதுக்கியும் வைத்துள்ள சிறந்த நூல்கள் தெளிந்த உரைகள் சாசனங்கள் இவைகளை உதவியாகக் கொண்டு இக்காலத்திய புலவர்கள் நல்ல முறையில் ஆராய்ந்து நம் தமிழ்நாட்டுப் பண்டைய சரித்திரங்களைக் கூடியவரையில் கோவைப்படுத்தி எழுதி வருகிறார்கள்.

இவர்களாற் றகுந்த முறையில் எழுதப்பட்டு வருகின்ற தமிழ் வரலாறு, ராஜராஜச்சோழன், தமிழ்நாட்டு மூவேந்தர் சரித்திரம், பல்லவர் சரித்திரம், சைவசித்தாந்த வரலாறு, என்பனபோன்ற ஆராய்ச்சி நூல்கள் கற்பவர்க்கெல்லாம் அமுத கடத்தையும் கற்பகத்தருவையும் போற் சிறந்த பலன்களைத் தருவனவா யமைந்திருக்கின்றன. இவற்றுட் பலநூல்கள், மிக மேன்மைதங்கிய பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் டைரக்டர் ஆபீஸாரால் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சர்வ கலாசாலைகள் முதல் மிகப் பல பெருங்கல்விச் சாலைகளிலெல்லாம் போதிக்கவும் பெறுகின்றன.

இவைமாத்திரமன்றி, தக்க ஆதாரங்களோடுள்ள சமயாசாரியர்கள் மதாசாரியர்கள் இவர்கள் முதலானவர்களுடைய சரித்திரங்களும், பாடல்களும், முழுதுமாகவும் பகுதிகளாகவும் கொண்டு ஒவ்வொரு வருடமும் மேற்சொன்ன டைரக்டர் ஆபீஸார் அவர்களின் அறிவிப்பின் மேல் பாடபுத்தகங்களாக வைததுப் போதிக்கப் படுவதோடு இக்காலத்திய அரசியற் றலைவர்களிற் சிறந்தார்கள் சரித்திரங்களிற் சிலவும் போதிக்கப்படுகின்றன.

25

என்றாலும், நம் தமிழ் மாணவர்களும் பிறரும் பிறநாட்டுச் சரித்திரங்களை அறிந்துகொள்ளும் அளவிற்கேனும் நம் தாய் நாடாகிய தமிழ்நாட்டுச் சரித்திரங்களைத் தெரிந்துகொள்ள முடிவதில்லை. மேலே சொன்ன சரித்திரங்களில் ஏதேனும் ஒன்றையோ அல்லது ஒன்றின் பகுதியையோ எடுத்துச் சொல்லி இது நிகழ்ந்த இடத்தைக் காட்டு என்றால் வேறு எந்தப் படத்தைக் கொண்டும் பெரும்பாலோரால் காட்ட முடிவதில்லை, உதாரணமாக,

பனம்பாரனுர் முதல் தமிழ்நாட்டின் வடவெல்லை கூறவந்த அவ்வளவு புலவர்களும், இந்நாட்டின் வடவெல்லையில் எவ்வளவோ மலைகள் இருந்தும் திருவேங்கடமலை திருக் காளத்திமலை இவைகளை மாத்திரமும், மற்றும்சில பாஷை களிருந்தும் வடுகை மாத்திரமும், எல்லையாகக் கூறியதற் குக் காரணங்கள் என்னென்ன? என்ருல், அனேகருக்குப் பதில்கூற விபல்வதில்லை. ஒருவாறு கூறினும் கேட். போர்க்குத் திருப்தியாவதில்லை, ஏன்? தமிழ்நாட்டின் வடவெல்லையைப் படமாக வரைந்து காட்டினல்தான் தக்க பதில் கூறினதாய் ஆகும். அப்பொழுதுதான் கேட் டோர்க்கும் அவற்றின் உண்மை விளங்கும். இவை மாத்திரமா? இவ்விருமலைகளைத் தவிர இன்னும் எத்தனை மலைகளும் ஊர்களும் பண்டைக்காலத் தமிழ் வரலாறு களைக் கொண்டனவாய்த் தமிழ் நாட்டின் வடபாகத் தில் இருக்கின்றன? என்ருல். இதற்குப் பின்னும் அனேக ரால் பதில்சொல்ல முடிவதில்லை. தமிழர் நிலைமைய இங்ஙன மிருந்தால் தெலுங்கர் முதலானவர்களைப் பற்றி என் சொல்வது? இவைகளுக்கெல்லாம் காரணம் பிறநாட்டுச் சரித்திரங்களை அது அது நிகழ்ந்த இடம் திசை வழி எல்லை ஆகியவைகளோடு அறிந்து கொள்வதற்கான அவ்வநாட் டுத் தரைப்படங்கள் கிடைப்பதைப்போல நம் தமிழ்நாட்டுச் சரித்திரங்களையோ இதன் 'எல்லைகளையோ தெரிந்து கொள் வதற்கான முறையில் எழுதப்பட்ட தமிழ்த் தரைப்படங் கள் அவர்களுக்குக் கிடைக்காமையேயாம்.

முன் கண்டவோ அன்றிக் காணுதனவோ எந்தப் பொருளின் தன்மைகளைப் போதிக்கும்போதும், "அப் பொருளின் வடிவத்தைச் சிற்பமாகச் செய்தோ படமாக வரைந்தோ எதிரே வைத்துக்காட்டிப் போதிப்பதுதான் மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கேற்ற நல்ல முறை".

யென்று அறியப்பட்டு, அவ்வாறே போதித்தும் வருகின்ற இக்காலத்தில்; கட்புலனுக்கன்றி மற்றெப்புலனுகர்வுக்கும் எட்டாத நக்ஷத்திரங்கள் முதலான வானப்பொருள்களையும் பிண்டமாகச் செய்தும் படமாக வரைந்தும் காட்டிப் போதிக்கும் இக்காலத்தில்; நம் தாய்நாட்டின் இணையற்ற பெருஞ்சிறப்புகளுக்கெல்லாம் உயிர் நிலையாயிருப்பவும், நம்மவர்களின் இகபர வாழ்க்கைத் துறைகள் ஒவ்வொன்றுக்கும் உறுதுணை யாவனவும்ஆன நம் முன்னோர்களின் சரித்திரங்களை, உள்ளவாறறியவோ அன்றி யறிவிக்கவோ தகுதியான தமிழ் நாட்டுத் தமிழ்த் தரைப்படங்களை இவ்வளவுகாலம் வரையில் தயார்செய்து கொள்ளாம லிருந்தது கல்விச் சாலைகளுக்கு மாத்திரமன்றி நம் தமிழ் நாட்டுக்கே பெருங் குறையல்லவா?

இக்குறையைத் தவிர்ப்பதற்காக வென்றே இம் மூன்று படங்களும் என்னால் எழுதிப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. இப்படங்கள்தாம் முதலில் தமிழ்வேதப் பற்றுடையார்களுக்கென்றே துவங்கி வரையப்பட்டன ஆயினும், நாளடைவில் நீண்டகால உழைப்பையும் பெருந் தொகைப் பணச் செலவையும் மேற்கொண்டு உருவாக்கப் படும் இப்படங்களில் தமிழ்நாட்டின் சம்பந்தமாய்க் கொண்டுள்ள வேறு பலவகைப் பற்றுடையார்க்கும் நற் பலன்களைத் தரத்தக்க முறையிலேயே உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றி அவைகளுக் கேற்றவாறும் எழுதிப் பதிப்பித்திருக்கிறேன். அதனால், தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கலவிச் சாலையிலும் இப்படங்களை வாங்கி வைத்துப் பயன்பெறச் செய்தல் மிகவும் அவசியமான நற் செயல்களில் ஒன்றும் என்பதைக் கல்விச்சாலைகளின் உரிமையாளர்கள் நிர்வாகத்தர்கள், மேற்பார்வையாளர்கள், பரீக்ஷாதிகாரிகள், நூலாசிரியர்கள், ஆராய்ச்சிப்புலவர்கள்,

போதனாசிரியர்கள் ஆகிய உங்களுக்கும், மற்றுமுள்ள உத்தமத் தமிழன்பர்களாகிய யாவர்க்கும் நினைவூட்ட விரும்புகிறேன்.

26

இப்படங்களைக் கல்விச் சாலைகளில் வைத்துப் போதிப்பதால் உண்டாகும் நற்பலன்கள் மிகப்பலவாமென்பதை நன்குணர்ந்தவர்களாகையால், சென்னையிலுள்ள பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் டைரக்டர் ஆபீஸார் தமிழ் ஜில்லாக்களிலுள்ள உயர்தரக் கல்விச்சாலைகளுக்கெல்லாம் இப்படங்களை வாங்கிவைத்துப் போதிக்கும்படிச் சிறந்தவோர் அறிவிப்பைப் பிறப்பித்தனுப்பி யுள்ளார்கள்.

27

அப்பெரிய ஆபிஸிலிருந்து அனுப்பப்பட்டுள்ள மிகச் சிறந்ததான அவ்வறிவிப்பி ÷ நகலை இவ்விளம்பரத்தின் முகப்பில் பதிப்பித்திருக்கிறேன.

28

இவர்களால் அனுப்பப்பட்டுள்ள அவ்வன்பு நிறைந்த அறிவிப்பை ஆதரித்துச் சென்னை கவர்ன்மெண்டு சர்வகலாசாலை, அண்ணாமலை சர்வகலாசாலை, இவையுள்படப் பெரும்பாலான உயர்தரக் கல்விச்சாலைகள் மற்றுமுள்ள தமிழ்க் கல்விச்சாலைகள் ஆகிய இவற்றிற்குரியார்கள் இப்படங்களை வாங்கிவைதது‌ப் போதித்துத் தந்தம் கல்விச் சாலைகளையும் மாணவர்களையும் முன்னுக்குக் கொண்டு வருகின்றார்கள்.

இவர்கள் மாத்திரமன்றித் திருக்கோயில்களின் நிர்வாகத்தர்கள், அக்கோயில்களின் வழிபடும் அன்பர்கள், கல்விச்சாலைகளின் நிர்வாகத்தர்கள், மேற்பார்வையாளர்கள்,

போதகாசிரியர்கள், மாணவர்கள், நூலாசிரியர்கள், உரையாசிரியர்கள், பலநூல் ஆராய்ச்சிப் புலவர்கள், சொற்பொழிவாளர்கள், தமிழ்வேத பாராயணர்கள், தமிழ்வேத போதகாசிரியர்கள், தமிழ்வேதப் பாடசாலை நிர்வாகத்தர்கள், தமிழ்வேத ஆராய்ச்சியாளர்கள், மங்கள சாசனப் பிரபந்த பாராயணர்கள், ஆராய்ச்சியாளர்கள், சுத்தாத்துவித சைவ சித்தாந்தத் திருமடாதிபதிகள், பலவகைப்பட்ட வைதிகாசாரத் திருமடாதிபதிகள், அவ்வம்மதாசார சாத்திர போதகாசிரியர்கள், அவ்வம்மதாசாரசீலர்கள், மூர்த்திதலம் தீர்த்தம் இவற்றை முறைப்படி யாத்திரைசெய்து வழிபடும் பெரியார்கள், வேறு பலவகை யாத்திரைப்பிரியர்கள், பலவகைத் தருமகர்த்தர்கள், புத்தகசேகர நிலையங்கள், நல்லார் பலர்சேரும் பொதுத்தானங்கள் வாசகசாலைகள் பிரயாணிகள் தங்குமிடங்கள் இவற்றின் நிர்வாகத்தர்கள், சமயப் பிரசாரகர்கள், அரசியற் பிரசாரகர்கள், உத்தியோகத்தர்கள், ஜமீன்தார்கள், பெருநிலத்தலைவர்கள், நகரத்தார்கள், மிராசுதார்கள், பலபொருள் வர்த்தகத்தலைவர்கள், யந்திரவாகன இயக்கர்கள், முன்கால நிகழ்காலச் செய்திகளை வெளியிட்டுவருகின்ற தினப்பத்திரிகைகள் முதலாகப் பலவகைப்பட்ட பத்திரிகைகளின் ஆசிரியர்கள், அப்பத்திரிகைகளின் வாசகர்கள் இவர்களும்; மற்றும் வெவ்வேறு திறத்தார்களும், இப்படங்களை வாங்கி உபயோகித்து நற்பயன் பெற்று வருகின்றார்கள்.

29

இவ்வாறு உத்தமத் தமிழன்பர்களும் உண்மைத் திருத்தொண்டர்களுமாகிய இத்திறப்பெரியார்களெல்லாம் வாங்கிப் பயன்பெறுவதிலிருந்து, இப்படங்களில், தமிழ் வேதப்பற்றுடையார்களுக்கும் மற்றும் வெவ்வேறுவகைப்

பற்றுடையார்களுக்கும் அவரவர்களுக்கு வேண்டிய தலங்கள் ஊர்கள் மலைகள் ஆறுகள் வாய்க்கால்கள் ஏரிகள் கடற்றுறைகள் தீவுகள் ரோடுகள் இருப்புப்பாதைகள் ஸ்டேஷன்கள் எல்லைகள் இவ்வளவும் காட்டப்பட்டிருக்கின்றன என்பதும்; ஆதியந்தம் அறியமுடியாததும் தெய்வத் தன்மைவாய்ந்ததுமான அமிழ்தினு மினிய தமிழ்மொழியையும், இத்தெய்வத்தமிழை நல்ல முறையில் வளர்த்து அலங்கரிக்கின்றாரையும், ஆதரிப்பதில், வேறு எம்மொழிப் பற்றுடையாரினும் நாங்கள் முற்பட்டவர்களே என்று தங்கள் பெருந்தன்மையையே இவர்கள் காட்டியிருக்கிறார்கள் என்பதும் தெளிவாகின்றதல்லவா? ஆகவே, மெய்யன்புடைய நீங்களும் இப்படங்களை வாங்கி ஆதரிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

30

மெய்கண்டசந்தானச் சுத்தாத்துவித சைவாதீனத் திருமடங்களில் ஒன்றான திருப்பனந்தாள் என்னுந் தலத்திலுள்ள ஸ்ரீகாசி மடத்தில், ஸ்ரீகுமரகுருபரசுவாமிகளின் திருமரபில், 20 ஆமவராகப் பட்டம்பெற்றுத் தவவரசு நடத்தியருளிய சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீசுவாமிநாத சுவாமிகள் அவர்கள். அவர்கள், தமிழ்ப்புலவர்களின் தொகையை மேன்மேலும் பெருக்கி அவர்களால் நம் தெய்வத் தமிழ் மொழியையும் இதனோடுடன் பிறந்த சைவசமயத்தையும் பலவகையாலும் தழைத்து வளரச் செய்யவேண்டும் என்ற பெருநோக்கத்துடன் வருடந்தோறும் தமிழ்ப் பண்டிதத் தேர்தலில் தேர்ச்சிபெற்று முன்வருவார்க்கு 'ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியின் ஞாபகார்த்தப் பரிசு' என்று 1000 ரூபாய்கள் பரிசு தரும்படியாயும், திருமுறைப் பயிற்சி முதலான பல தேர்தல்களைக் குறிப்பிட்டு அவற்றிற்

தேர்ச்சிபெற்று முன்வருவார்க்கு 'இராஜராஜச் சோழர் ஞாபகார்த்தப்பரிசு' என்பது முதலான பலவகைப்பட்ட தொகைகளைக்கொண்ட பரிசுகளைத் தரும்படியாயும், தக்க சாசனங்களோடமைந்த ஏற்பாடுகளைச் செய்தளித்தவர்கள். தங்கள் திருமடத்தின் சார்பாகவே செந்தமிழ்க் கல்லூரி ஒன்றையும் தாபித்துள்ளார்கள். மற்றும் பல தருமங்களையும் செய்துள்ளவர்கள். அவர்களே நம் தமிழ் வேதத் திருமுறைகளை ஆராய்ந்து எழுதி இத்தமிழ்வேதத் தலயாத் திரைப் படங்களுடன் அச்சிட்டு வெளியிட விரும்பிய என்னை நாலரை வருடகாலம் தங்கள் திருமடத்தில் இருத்தி மிக்க அன்புடன் ஆதரித்து நூலாராய்ச்சி செய்வதற்கான வசதிகளையும் செய்தளித்தவர்கள்.

இப்படங்கள் மூன்றையும் பதிப்பிப்பதற்கான பொருளுதவிகளைச் செய்த முப்பெரு வள்ளல்களும், வரையறாது வழங்கி "வள்ளற்பிரபு" என்று உலகமெங்கும் புகழ்ப்பெற்று எல்லாச் செல்வ வளங்களோடும் வாழ்ந்திருந்து அவர்களுடைய திருப்பணியை ஏற்றுக் கொண்டருளிய திருக்காளத்தியீசர் சந்நிதியிலேயே 1942-இல் சிவப்பேறெய்திய ஸ்ரீ மெ. அரு. நா. இராமநாதச் செட்டியார் அவர்களையும் அவர்களைப்போன்ற மற்றம்பல வள்ளல்களையும் தன்னகத்தே தோன்றச்செய்து, புலவர்களுக்கும் சிவசமயப் பிரசாரகர்களுக்கும் என்றும் தாயகம்போன்று விளங்கிவருகின்ற தேவகோட்டை என்னும் தனிப்பேர்பெற்ற திருநகரத்தவர்களே.

இம்மூவரில் ஒரு வள்ளல்:—உயர்திருவாளர் அள. சுப. பழ. சுப்பிரமணியச் செட்டியார் அவர்கள். இவர்கள் மாத்தூர்க் கோயிலார் வழிவழி வந்தவர்கள். அரசர்களாலும் புகழ்ப்பெற்ற ஸ்ரீ அழகப்பச் செட்டியார் அவர்களின் வம்சத்தவர்கள். தேவகோட்டை ஜமீன்தார் அவர்களைச் சேர்ந்தவர்கள். பெருங் கவிப் புலவராய்த் திகழ்ந்த ஸ்ரீ வீர. லெ. சின்னையச் செட்டியார் அவர்களின் திருமரபில் வந்த பெரும்புலமை வாய்ந்தவர்கள். மேன்மேற் பெருகும் பெருந்திருவுடையவர்கள். தமிழ்மொழி வட

மொழி யிரண்டிலும் மிகப்பயின்று தேர்ந்தவர்கள். அவதானப் புலமையை யியல்பாகவே உடையவர்கள். சுத்தாத்துவித சைவசித்தாந்தமே சித்தாந்தமெனக் கொண்டவர்கள். திருமுறைப்பூசை, பாராயணம், இவைகளைத் தங்கள் உயர் நிலைக் கேற்றவாறு பலபடப் பார்த்துள்ள அதிகார விசாரணைகள் அனைத்தையும் ஒருவாறாக ஒதுக்கிக்கொண்டு மிக்க நிதானமாயிருந்து முறைப்படி நியமமாய்ச் செய்து வருகின்றவர்கள். திருப்புனவாயிற்றலத்தில் தங்கள் பிதாவைப் போலவே பாக்கியுள்ள சுவாமி சன்னிதி முதலிய சிவாலயத் திருப்பணிகளை வேண்டியவளவிற் செய்து வருவதோடு மற்றும்பல திருத்தலங்களிலும் ஆலயங்களுக்கும் அவற்றிற் கங்கமானவற்றிற்கும் பற்பல திருப்பணிகளையும் உதவிகளையும் இயன்றவரையிற் செய்து வருகின்றவர்கள். அடுத்தடுத்துத் தம்மை அங்கமாகவும் தலைமையாகவும் விரும்பும் பஞ்சாயங்களில் மாத்திரமன்றி மற்றெங்குமே நடுநிலை மாறாதுரைக்கும் நன்மொழி வல்லவர்கள். தம்மாலும், தம் உறவினராலும், தாபிக்கப் பெற்ற சிவாகம சங்கத்தைப் பாதுகாத்து விருத்திசெய்து வருகினறவர்கள். முன்னைத் தவத்தின் பயனைச் சூதுவாதுகள் கள்ளம் கவடுகள் சார்ந்தறியாத வெள்ளை யுள்ளம் உடையவர்களும், சிவபத்தி சிவனடியார் பத்திகளிற் சிறந்தவர்களும், தாம் அனுபவித்தற்கியல்பாயமைந்துள்ள பெருஞ் செல்வப் பயன்களோடு இளமையின்பங்களையும் மறந்து "காங்கிரஸ்" என்னும் ஜனநாயக அரசியற்றாபனம் வன்மை பெற்றோங்குவதற்காக அதனால் வந்த பலவகையின்னல்களுக்கும் உட்பட்டு அரசியல் வீரத் தியாகியாய் விளங்கி வருகின்றவர்களும், மிக்க பரோபகாரச்சிந்தனை யுடையவர்களும் ஆகிய ஸ்ரீ திருநாவுக்கரசர் அவர்களைத் தம் அருமைத திருக்குமாரராய் அடைந்துள்ளவர்கள். உருவிலும் திருவிலும் சிறந்த பெருங்கிளைகளையுடையவர்கள். அடைந்தாரைப் புரக்கும் அருங்குணம் உடையவர்கள். தங்கள் சந்ததியார்க்கும் இனத்தார்க்கும் நல்ல எடுத்துக் காட்டாய் விளங்கத்தக்க உயர் நிலையிலுள்ளவர்கள். நான் இப்படங்களை உருவாக்குவதற்காக மேற்கொள்ள வேண்டியிருந்த கஷ்டங்களையும்

இவை உருப்பெற்றால் யாவர்க்கும் இவற்றாலுண்டாகும் நன்மைகளையும் ஒரு முன்னுரையாக எழுதி உதவியுஞ் செய்து தம் இனத்தவர்களையும் மற்றவர்களையும் இத்திருத் தொண்டுக்கு உதவுமாறு சிபார்சு செய்து தூண்டியவர்கள். மற்றும் பல சிறப்புக்களையும் உடையவர்கள். இவர்களே, நம் தமிழ்நாட்டுப் படத்தைப் பதிப்பிப்பதற்கான பொருளுதவியைச் செய்ததோடு மற்றும் வெவ்வேறு உதவிகளையும், 1933 இலிருந்தே செய்து வருகின்றவர்கள்.

இன்னொருவள்ளல் உயர்திருவாளர், உ. ராம. மெ. சுப. சேவு. மெய்யப்பச் செட்டியார் அவர்கள். இவர்கள், நேமம் கோயிலார் வழிவழி வந்தவர்கள். திரு. ஐயாற்றப்பர் ஆலயப்பணியை அந்திய நிலையிலும் மறவாதிருந்து அவர் கழலடைந்த ஸ்ரீ சேவுகச் செட்டியாரவர்களின் அருமைத் தவப்புதல்வர்கள் மூவரில் முதல்வராய் முன்னுதித்தவர்கள். இருவேறுலகத்தியற்கை என்றதுபோ லல்லாமல் பண்டைத் தவத்தின் பயனைப் மேன்மேற் பெருகும் பெருந் திருவுடையராயிருப்பதோடு புலவரெலாம் போற்றும் தெள்ளியராயும் உயர்ந்து திகழ்பவர்கள். புலவர்களின் கூட்டுறவே பெரிதெனக்கொண்டு அவர்களோடு அன்புடன் அளவளாவி அருங்கலை பலவும் ஆய்ந்து ஆனந்திப்பவர்கள். வரிசையறிந்து வழங்கும் வள்ளன்மையுடையவர்கள். தாம் சுத்தாத்துவித சைவத் திருத்தொண்டரா யிருப்பதல்லாமல் பிறசமயச் சார்புகளில் எதையும் எவ்வகையிலும் மேற்கொள்ளாதவர்கள். தம்மால் மதித்தற்குரிய சிவசமயச் சார்புடையார், பிறவகைகளில் எத்திறச் சிறப்புடையரே யாயினும், தம் சமயநெறி நின்றும் பிறழக்காணில் மேற் சென்றிடித்துக்கூறி யுண்மை நெறியிலுய்க்கவல்ல நட்பாட்சியும் மெய்ப்பத்தியும் பேராற்றலும் உடையவர்கள். விநாயகர் தரிசனம் தம் முனனோர்களைப் போலவே விதிப்படி காலையிற் செய்பவர்கள். இவ் விநாயகப்பெருமானது திருவடிப் புகழ்களையும், மற்றும் பல சிவவடிவங்களின் இணையற்ற பெருமைகளையும் பலவகையான பிரபந்தங்களாகப் பாடித் துதித்து நல்லருள் பெற்று வருகின்றவர்

கள். பல தருமத்தாபனங்களுக்கும், பொதுநலத் தாபனங்களுக்கும், தலைமையும் அங்கமும் வகித்துவருகின்றவர்கள். மேற்படி திருஐயாறு என்னும் தலத்தில தங்கள் அருமைத் தந்தையார் நினைத்தவாறே சிவாலயத் திருப்பணியை மயனுங்கண்டு மகிழும் முறையில் செய்தமைத்து, அதற்கங்கமான மற்றும் பல திருப்பணிகளையும் செய்து வருவதோடு; திருஏடகம், திரு இலம்பையங்கோட்டூர், முதலான தலங்களிலும் சிவாலயத் திருப்பணிகளையும் மற்றும் அவற்றிற்கங்கமானவைகளையும் இயன்ற வரையிற் செய்து வருகின்றவர்கள். குறிப்பறிந்தொழுகும் தம்பிமார்களோடு ஏவாதுணரும் நன்மக்களையும் குணம் நலம் பெருகும் குடும்பத்தவர்களையும் நிறையப் பெற்றுள்ளவர்கள். மற்றும் பல சிறப்புக்களையும் உடையவர்கள். இவர்களே நம் சோழநாட்டுப் படத்தைப் பதிப்பிப்பதற்கான பொருளுதவியைச் செய்ததல்லாமல் மேலும் பல உதவிகளையும் செய்துவருகின்றவர்கள்.

மற்றொருவள்ளல் உயர்திருவாளர் பழ-சோம(யாழ்ப்பாணம்) சோமசுந்தரச் செட்டியார் அவர்கள். இவர்கள், இளையாற்றக்குடிக் கோயிலார் வழிவழி வந்தவர்கள். தமிழ்வேதத் திருமுறைகளில் அளவுகடந்த பற்றுடையவர்களாய் அனுதினமும் பண்ணோடு பாராயணம் செய்து வந்தவர்கள். திருமகேந்திரப்பள்ளி, திருஅகத்தியான்பள்ளி, கோடிக்குழகர்கோயில் இத்தலங்களில் சிவாலயத் திருப்பணிகளைச் சிறப்புறச் செய்ததல்லாமல் மற்றும் வெவ்வேறு சிவப்பணிகளுக்கும் செந்தமிழ்ப் புலவர்களுக்கும் மனம்கொண்டவரையில் பொருளுதவிகளையும் பிறவுதவிகளையும் செய்து வந்தவர்கள். இன்னும் பற்பல சிறப்புக்களையும் உடையவர்களாயிருந்து 1942-இல் சிவப்பேறெய்தியவர்கள். இவர்களே நம்முடைய ஈழநாட்டுப் படத்தைப் பதிப்பிப்பதற்கான பொருளுதவியைக் செய்தவர்கள்.

இவர்களுடைய அருந்தவப் புதல்வராகிய உயர்திருவாளர் பழ. சோம. சு. கயிலாசநாதச் செட்டியார் அவர்

களும், தம் தந்தையாரைப்போலவே தங்கள் இனத்தவர்களேயன்றி யாவரும் புகழ இல்லறம் நடத்துகின்றவர்கள். மேன்மேற் பெருகும் பெருந்திருவுடையவர்கள். நிறைந்த குருலிங்க சங்கம பத்தியுடையவர்களாய்த் தம் தந்தையாராலும் தம்மாலும் ஏற்படுத்தப்பட்ட சிவதருமங்களை மேன்மேலும் சிறப்புறச் செய்து வருகின்றவர்கள். தமிழ்மறை முழுவதையும் தக்கமுறையில் ஆராய்ந்து வருகின்றவர்கள். உலகியலிற் சிறந்தார்களேயன்றி தவநெறியிற் சிறந்தார்களாலும் நனகு மதிக்கப்படுகின்ற உயர்நிலையிலுள்ளவர்கள். அறிஞர்களை ஆதரிக்கும் அருங்குணம் உடையவர்கள். மற்றும்பல சிறப்புக்களையும் உடையவர்கள். என்பால் மிக்க அன்புடையவர்களாய் வேண்டும் உதவிகளை அவ்வப்போது செய்து வருகின்றவர்கள்.

இவர்களேயன்றி,

காஞ்சிபுரத்திலுள்ள ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் திருமடத்தில் தொண்டைமண்டலச் சைவ வேளாளர்களின் இனக்குரு ஞானபீடத்தில் 1926 வரையில் அமர்ந்திருந்து அருள் செய்துவந்த திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்.

மிக மேன்மை தங்கிய கனம் M. பக்தவத்சல முதலியார் B. A., B. L. அவர்கள். (இவர்கள் இப்பொழுது சென்னை அரசாங்க மந்திரிப் பதவியிலமர்ந்திருந்து நம் மாகாணத்துக்குப் பற்பல நன்மைகளைப் புரிந்துவருகின்றார்கள்.)

முன்பு சென்னை அரசாங்க மந்திரிப் பதவியிலமர்ந்திருந்து நம் மாகாணத்திற்குப் பற்பல நன்மைகளைப் புரிந்து வந்தவர்களும், இப்பொழுதும் பல பொதுத்தாபனங்களுக்குத் தலைமையும் அங்கமும் வகித்துவருகின்றவர்களும் ஆன, உயர்திருவாளர் Sir. P.T., ராஜன் அவர்களின் இளையதகப்பனாராகிய மதுரை டவுன், மேலமாசி வீதி, (உத்தம பாளையம்) உயர்திருவாளர் சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.

செங்கற்பட்டு ஜில்லா ஒழலூர், உயர் திருவாளர் வி. அழகேச முதலியார் அவர்கள். (இவர்கள், இப்பொழுது அகில இந்திய அரசியல் நிர்ணய சபையில் அங்கத்தினராகவும், தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியில காரியதரிசியாகவும், பதவி வகித்துப் பொதுவாக இந்தியாவுக்கும் சிறப்பாக நம் தமிழ்நாட்டுக்கும் பற்பல நன்மைகளைச் செய்து வருகின்றார்கள்.)

தஞ்சாவூர்ஜில்லா இராஜமன்னார் குடியிலுள்ள தொண்டைமண்டலச் சைவவேளாள மாணவர் இல்லத்தின் தருமகர்த்தராகிய கோட்டூர் திரு அரங்கசாமிமுதலியார் அவர்களின் தமயனாரும், பெருங்கொடை வள்ளலுமாயிருந்த உயர்திருவாளர் S சடகோப முதலியார் அவர்கள்.

தஞ்சாவூர்ஜில்லா, நெடும்பலம், உயா திருவாளர்-R. சாமியப்பா முதலியார் அவர்கள். (இவர்கள் தஞ்சாவூர் ஜில்லா போர்டின் பழைய துணைத்தலைவர். மற்றும் பல பொதுநலத் தாபனங்களுக்குத் தலைமையும் அங்கமும் வகித்து வருகின்றவர்கள்.)

தஞ்சாவூர் ஜில்லா, சீகாழி, உயர்திருவாளர் S. சாதசிவ முதலியார் அவர்கள். (இவர்கள் பெருநிலத் தலைவராயிருப்பதோடு செந்தமிழ்ப் புலவராகவும திகழ்ந்து பல உண்மை நூல்களை ஆராய்ந்து வெளியிட்டுவருகின்றார்கள்.)

தஞ்சாவூர் ஜில்லா, திருவாரூர் உயர்திருவாளர், பாவா. வைத்தியலிங்க முதலியார் அவர்கள்.

திருநெல்வேலி டவுன், உயர்திருவாளர் S. பால்வண்ண முதலியார் அவர்கள்.

திருநெல்வேலி ஜில்லா, விஜயநாராயணம், உயர் திருவாளர்-ராவ்பகதூர்-P. N. மார்த்தாண்டம் பிள்ளை B. A., B. L. அட்வொகேட் அவர்கள். (இவர்கள் 'ஜட்ஜ்' ஆகவும் பதவியேற்று நீதிவழங்கியவர்கள்.)

திருநெல்வேலி ஜில்லா, தென்காசி, சம்பாத்தெரு உயர்திருவாளர் T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள்.

சென்னை எழும்பூர் கண் ஆஸ்பத்திரி சூபிரண்டெண்டெண்டு அண்டு சர்ஜ்ஜன், உயர்கல்வித் திருவாளர். R. E. S. முத்தையா M.S.,D,O., (oxon) அவர்கள்.

கோயம்புத்தூர் டவுன், உயர்திருவாளர் C. K. சுப்பிரமணியமுதலியார் அவர்கள். (பெரியபுராண உரையாசிரியர்.)

கோயம்புத்தூர் ஜில்லா, புரவி பாளையம், ஜமீன்தார்

அவர்களின் தர்மபத்தினியாரும் செந்தமிழ்ப் புலமையாரும் ஆகிய ஸ்ரீமதி துளசி அம்மணி அம்மாள் அவர்கள்.

திருச்சிராப்பள்ளி எஸ். பி. ஜி. கல்லூரித் தமிழ்ப் பெருங் கணைக்காயர் உயர்திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்.

தஞ்சாவூர் ஜில்லா, வேதாரணியம் கோடிக்கரை, உயர் திருவாளர் ஒ.அ.க. ஒமகுட்டி பிள்ளை அவர்கள்.

வடஆர்க்காடு ஜில்லா, கௌசிகன்பட்டு கிராமத்துப் பெருஞ்செல்வத்து உயர்சைவ முதலிமார்கள்.

வடஆர்க்காடு ஜில்லா—சென்றத்தூர் உயர்திருவாளர் ஐயாத்துரை முதலியார் அவர்கள்.

பலவான்குடி—சிவநேசன் பத்திரிகை ஆசிரியர், உயர் திருவாளர் ராம. கு. இராமசாமிச் செட்டியார் அவர்கள்.

கண்டனூர் தெ. அரு. சித. இராமநாதச் செட்டியார் அவர்கள்.

தஞ்சாவூரில், ஜில்லாரிஜிஸ்டரார் பதவியிலிருந்துவந்த வல்லூர் உயர்திருவாளர் சு. சுவாமிநாதமுதலியார் அவர்கள். (இவர்கள் இப்பொழுது தெ. ஆ. ஜில்லா கடலூரில் பல நல்லறங்களைச் செய்துகொண்டு வாழ்ந்துவருகின்றார்கள்.)

பொன்மலையிலுள்ள S.I.R. தொழிற்சாலையில் ஹெட் ட்ராப்ட்ஸ்மெனுயிருந்த பரோபகார வள்ளல் உயர்திருவாளர் வீ. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள்.

திருச்சிராப்பள்ளி, தெப்பக்குளத் தெரு, சைவர் உணவுச்சாலைத் தலைவர், திருமாகறல், உயர்திருவாளர் க. முத்து முதலியார் அவர்கள்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத் திருக்கூட்டத்து ஸ்ரீலஸ்ரீ. சட்டநாத சுவாமிகள் அவர்கள்.

ஷை தருமபுர ஆதீனத் திருக்கூட்டத்து ஸ்ரீலஸ்ரீ அருணந்தி சுவாமிகள் அவர்கள், (இவர்கள் இப்பொழுது திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடாலயத்துக்கு அதிபர்களாய் உயர் பட்டம் பெற்றுத் தவஅரசு நடத்தி வருகின்றார்கள். செந்தமிழ் செழித்து வளர்வதற்காகவும் சைவசமயம் தழைத்துப் படாவதற்காகவும் இவர்களாற் செய்யப்பட்டு வருகின்ற தருமங்கள் மிகப்பல.)

ஷை திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடாலயத்துத் திருத்தொண்டர்களாகிய பெருந்தனக் காரியாலயத் தலைவர்கள், உயர் சைவ ஓதுவார்கள், இவர்கள் முதலாக அதன் ஒவ்வோர் செயற்றுறைகளிலுமுள்ள அங்கத்தினர்கள்.

பிரம்மஸ்ரீ P. S. சாரங்கபாணி ஐயங்கார் B A.B.L., அட்வொகேட் அவர்கள். சென்னை, எழும்பூர்.

பிரம்மஸ்ரீ R. ரங்காச்சாரியார் B.A.B.L., அட்வொகேட் அவர்கள். சென்னை, தியாகராயநகர்.

சென்னை, கவர்ன்மெண்டு சர்வே ஆபீஸில் அஸிஸ்டெண்டு டைரக்டர் பதவியிலிருந்த மிகமேன்மை தங்கிய கனம் K. S. கர்ட்டிஸ் E S G,M.B.E, துரையவர்கள்.

ஷை ஆபிஸிலேயே உயர்தர உத்தியோகத்திலிருந்து ஒய்வுபெற்றுச் சென்னையில் வசித்துவருகிற சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பிரசாரகர், வித்வான், பாரிப்பாக்கம் உயர் திருவாளர் கண்ணப்பமுதலியார் அவர்கள்.

ஷை ஆபிஸிலேயே ட்ராப்ட்ஸ்மெனுயிருந்த உயர் திருவாளர் G. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள்.

சென்னை, பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் டைரக்டர் ஆபீஸில் செகரட்டரி பதவியிலிருந்த வித்வான், உயர்திருவாளர் தியாகராஜ பிள்ளை அவர்கள்.

சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் பொருளாதார உதவிப் பேராசிரியரா யிருந்துவருகிறவர்களும், செந்தமிழ் முன்னேறறப் பிரசாரகருமாகிய உயர் சைவத் திருவாளர் அ. முத்தையா எம். ஏ., அவர்கள். சென்னை, தியாகராய நகர் சிங்கார முதலியார் தெரு, 6-ஆவது எண், குரு விலாசம்.

சென்னை ஹிண்டு ரெலிஜியஸ் எண்டோமெண்ட்ஸ் போர்டில் செகரட்டரி பதவியில் இருந்துவருகிற உயர்திருவாளர் A. பாலகிருஷ்ண பிள்ளை B.A., M L. அவர்கள்.

தேவகோட்டை, ரெட்டையம்பாடி ஜமீன்தார், உயர் திருவாளர் அள. வீர. பெ. பெத்தபெருமாள் செட்டியார் அவர்கள்.

காரைக்குடி முதலான நகரங்களிலுள்ள சிவநேசத் திருக்கூட்டத்தவர்களாகிய நகரத்தார்கள். (இவர்கள் தாங்கள் உதவி செய்ததோடமையமல் மற்றுமுள்ள தம் இனத்தவர்களையும் உதவிசெய்யத் தூண்டிய பரோபகார அருஞ்செயல் என்றும் பாராட்டற்குரியது)

காரைக்குடி உயர்திருவாளர் மெ. செ. மெ. மெ. மெய்யப்பச் செட்டியார் அவர்கள்.

நான் தலயாத்திரை செய்துவரும் காலங்களிலும் பிறகும் என் பசிநிலை உடல்நிலை மரபுநிலை இவற்றிற் கேற்றவாறு அன்போடுபசரித்து உண்பித்த தாய்மார்களும் சகோதரிகளுமாகிய தமிழ்நாடு முழுவதிலுமுள்ள கற்புக்கரசியர்கள்.

ஆகிய இவர்களெல்லாம், என்னுடைய தலயாத்திரையின் சௌகரியங்களுக்கும் இப்படங்கள் இந்நிலையில் உருப்பெற்று நிறைவேறுவதற்கும், இவற்றைப் பலர்க்கும் பயன்படச் செய்வதற்கும், இன்றியமையாதனவாய் வேண்டி

யிருந்த உதவிகளைத் தந்தம் மனம் மொழி மெய் பொருள் ஆகியவைகளால் இயன்றவரையிற் செய்து உதவினவர்கள்.

இவர்களைப்போலவே, இன்னும் என் மனமார எவ்வளவு தூரம் எடுத்தெழுதிப் புகழ்ந்தாலும் அவ்வளவுக்கும் உரியவர்களாய் மிகப் பல பரோபகாரிகள் உதவி செய்துள்ளார்கள். அவ்வழியாப் புகழாளர்களின் பெயர்கள் உதவிகள் அவ்வளவையும் எழுதப்புகின் இவ் விளம்பரம் மிகவும் விரியும். அதனால், முன்னால் உதவி செய்தவர்கள், இப்பொழுதும் உதவி செய்துவருகின்றவர்கள், இனிமேலும் உதவிசெய்ய விருக்கின்றவர்கள், ஆகிய இவர்கள் யாவர்க்கும் நல்லருள் புரியவேண்டும் என்று இப் பெரிய திருப்பணியைச் செய்ய எவ்வகையிலும் பொருத்தமில்லாத என்னையும் ஓராளாக்கி இவ்வளவும் நிறைவேறத் திருவருள் புரிந்த எல்லாம் வல்ல சிவபெருமானைப் பலமுறையும் போற்றிப் பிரார்த்திப்பதையே கடமையாகக் கொண்டிருக்கின்றேன்.

இங்கே வெளிப்படையாகவும் குறிப்பாகவும் எடுத்துக்காட்டிய இவர்கள் செய்த உதவிகள், பார்த்தார்க்கும் கேட்டார்க்கும் ஒன்றுக்கொன்று சிறிதும் பெரிதும்போலத் தோன்றலாம். ஆயினும், அவை ஒவ்வொன்றும் காலத்தாலும் பயன்றூக்காமலுமே செய்யப்பட்டதோடு அவரவரைத்தவிர மற்றெவரிடத்திலிருந்தும் பெற முடியாதனவாகவுமே யிருந்தன. ஆதலால் அவை ஒவ்வொன்றும் இணையற்ற பேருதவிகளேயாகின்றன.

மொத்தத்தில், இத்திருப்பணிக்காக உதவி செய்தவர்களுக்கும் அவரவர்கள் செய்த உதவிகளுக்கும் தகுந்த ஒப்புக்கூறவேண்டுமானால், ஒருபெரிய தேவாலயத்தில் நிகழும் சிறந்தவோர் தேர்த்திருவிழாவையே ஒப்பிடலாம். இவர்கள் யாவர்க்கும் எல்லாம் வல்ல ஈசர் நல்லருள் புரிவாராக. இவர்கள் யாவர்க்கும் என் மனமார்ந்த வணக்கங்கள் உரிமையாகுக.